
# மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE



நெல்லை க. பேரன் மறைந்த
ஓராண்டு ஞாபகார்த்தமாக

உள்ளே: சட்டநாதனின் குறுநாவல் 'நீளும் பாலை'

ஜுலை 1992 விலை: 10 ரூபா

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

# RANI GRINDING MILLS

219, MAIN STREET,

**MATALE**

SRI LANKA

PHONE: **066 – 2 - 25**

★

★

★

# VIJAYA GENERAL STORES

**( AGRO SERVICE CENTRE )**

DEALERS : AGRO CHEMICALS, SPRAYERS, FERTILIZER & VEGETABLE SEEDS

**No. 85, Sri Ratnajothy Sarawanamuthu Mawatha.**
**( Wolfendhal Street, ) COLOMBO - 13.**

PHONE: **27011**

மல்லிகை

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய, கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

'Mallikai' Progressive Monthly Magazine

235 ஜூலை — 1992

# 27-வது ஆண்டு

## புதிய பரிசோதனை

சுவைஞர்கள் இந்த இதழில் ஒரு மாற்றத்தைக் காண்பீர்கள். சட்டநாதன் அவர்களுடைய குறு நாவல் 'நீளும் பாலை' இந்த இதழில் முழுவதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றிய அபிப்பிராயங்களைத் தயவு செய்து எழுதுங்கள். மல்லிகையின் ஓர் இதழைப் புதுக் கவிதை இதழாக வெளியிடலாம் என்பதும் எமது எண்ணமாகும்.

இதைப் பற்றியும் உங்களது கருத்துக்கள் எமக்குத் தேவை.

தொடர்ந்து மல்லிகையில் என்னென்ன விதமான புதுமைகளைப் புகுத்தலாம் என்பதையும் நமக்கு அறியத் தாருங்கள்.

ஆய்வுக்காகவும் மற்றும் தேவைகளுக்காகவும் மல்லிகையின் பழைய பிரதிகளைத் தேடிப் பலர் வருகின்றனர். குறிப்பாக உயர் கல்வி மாணவர்கள் நம்மை நெருங்குகின்றனர். எல்லாருக்கும் உதவ விருப்பம்தான். ஆனால் வேலைப் பளு காரணமாக உதவ முடிவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மாதா மாதம் இதழ்களைப் பத்திரப்படுத்துவதே சாலவும் சிறந்தது. சில மாதங்களாக றூல் கொப்பிப் பேப்பரில் மல்லிகை வருகின்றது. இந்த இதழ்களைப் பாதுகாத்து வையுங்கள். பின்னர் அந்த இதழ்களே நமது சரித்திரச் சங்கடங்களைப் பின் சந்ததியினருக்கு உணர்த்தும்.

மாசா மாசம் புதுப் புது அம்சங்களைச் சேர்க்கலாம் என யோசித்து வந்தோம். இடையில் நெருக்கடி காலப் பிரச்சினைகள் குறுக்கிட்டு விட்டன. எமது திட்டத்தையும் தற்காலிகமாக ஒத்திப் போட்டுள்ளோம்.

அடுத்து, கட்டுரை இதழையும் வெளியிடலாம் என்பது எண்ணம். போக்கு வரத்துச் சுணக்கம் காரணமாகப் பலர் எம்முடன் தொடர்பு கொள்ள முன் வருவதில்லை. தபால் தொடர்பு தாமதப்பட்டாலும் முன்னர் போல எம்முடன் அடிக்கடி தொடர்பு கொள்ளுங்கள்.

— ஆசிரியர்

கொழும்பு மாநகரில்
சுவையான உணவு வகைகளுக்கு
தரமான ஒரு சிற்றுண்டிச்சாலை

சுத்தம்,
சுகாதாரம்,
உபசரிப்பு
போன்றவைகளுக்குப் போற்றப்படுவது

உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பது

# கோல்டன் கபே

98, பாங்ஸால் வீதி,
கொழும்பு - 11

தொலைபேசி: 24712
29935

மல்லிகை

## மண் உயிர்க்கிறது!

இந்த யுத்த காலப் பின்னணிச் சூழலிலும் கூட, நமது மண்ணில் கலை, இலக்கியம், கலாசார முன் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதையிட்டு மெய்யாகவே புழகாங்கிதமடைகின்றோம்.

எங்கு பார்த்தாலும் இலக்கிய விழாக்கள், தமிழ் தின நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், அறிமுக, விமரிசனக் கூட்டங்கள், பட்டி மண்டபங்கள், வழக்காடு மன்றங்கள், இலக்கியச் சந்திப்புக்கள் கலந்துரையாடல்கள், நாடக அரங்கேற்றங்கள், மணிவிழாக்கள். பாராட்டுக் கூட்டங்கள், கம்பன் விழாக்கள், ஒலிப் பதிவு நாட, வெளியீடுகள், விபுலாநந்தர் நூற்றாண்டுக் கூட்டங்கள் எனா கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நாள் தோறும் நடந்தேறி வருகின்றனக்

இத்தனை சிரமங்களுக்கு, இழப்புக்களுக்கு, கஷ்ட நிஷ்டூரங்களுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் திரள் திரளாக வந்து கலந்து கொள்வதைப் பார்க்கும் போது, இத்தகைய வலுவான கலாசாரப் பின்னணி கொண்ட இனத்தை யாராலுமே வெற்றி கொண்டுவிட முடியாது என்ற முடிவுக்கே வரவேண்டியதாயுள்ளது.

சிரமமிக்க இந்தச் சூழ்நிலையிலும் கூட, இந்த மண்ணில் வாழும் தமிழ் மக்கள் மன விரக்திப்பட்டு ஓய்ந்துபோய் விடவில்லை என்பதையே இத்தகைய விழாக்கள் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

பொழுது போக்குக்காக அல்லாமல் பெரும்பாலான கலாசார நிகழ்ச்சிகள் மக்களை நெறிப்படுத்துவதற்காக - அவர்களது ஆளுமையையும், செயல் திறமையையும் ஊக்கப்படுத்துவதற்காக அமைந்துள்ளன என்றே நாம் கருதுகின்றோம்.

ஒரு புதிய சமுதாயம் தோன்ற வேண்டும். ஒரு புதிய மனிதன் தோன்ற வேண்டும். நமது மண்ணுக்கே உரித்தான தனித்துவமான ஒரு கலாசாரப் பாரம்பரை தோன்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் பல சிரமங்களுக்கு மத்தியிலும் உழைத்து வரும் கலைஞர்களை மனசாரப் பாராட்டுகின்றோம்.

கலை — கலாசாரம் பண்பாடுதான் ஓர் இனத்தின் உயிர்த் துடிப்பு. அந்த ஜீவத் துடிப்பு எந்த நேரமும் எந்த நெருக்கடியிலும் துடித்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இயக்கத்தைத் தூர்ந்து போக விட்டு விடக் கூடாது. ஓர் இனம் விழிப்புடனும் ஆரோக்கியத்துடனும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அதன் கலை இலக்கியங்களின் இயங்கு முறையை வைத்தே கணிப்பிட்டு விடலாம்.

# அட்டைப்படம்

## சமூகப் பொறுப்புணர்வுடன் பேனா பிடித்தவர் பேரன்.

**மு. அநாதரட்சகன்**

நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி பேரம்பலம் என்பவரை உங்களுக்குத் தெரியுமா?

நிச்சயமாக அந்தப் பெயரைப் பலரும் தெரிந்திருக்க நியாய மில்லை. ஆனால், அப்பெயரின் சுருக்க வடிவமான நெல்லை க. பேரனை ஈழத்து இலக்கிய உலகில் அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அவரோடு உறவாடாத இலக்கியவாதிகள் எவ ருமில்லை என்று துணிந்து கூறலாம்.

நெல்லை க. பேரன் தனது மாணவப் பருவத்திலேயே ஈழநாடு, வீரகேசரிப் பத்திரிகைகளில் செய்தியாளனாக எழுத்துலகில் பிர வேசித்தவர். ஈழத்திலே அறுபதுகளின் காலகட்டத்தில் எழுச்சி பெற்ற தேசிய இலக்கியம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ப வற்றின் தத்துவச்சார்பு நிலை நின்ற வீறார்ந்த இயக்கப் பண்புக ளால் உள்வாங்கப்பட்ட பேரன், சிறுகதைகள் எழுத ஆரம்பித்தார். இலங்கையிலிருந்து வெளிவந்த எல்லாப் பத்திரிகைகளிலும் அவரது படைப்புக்கள் வெளிவந்தன. தமிழகத்தில் 'தாமரை' யிலும் சிறுகதை கள், இலக்கியச் செய்திகள் பிரசுரமாகின. ஈழத்தில் குறிப்பாக மல்லிகையை இறுதிவரை தனது நேசிப்புக்குரிய இலக்கியக் கள மாக அவர் கொண்டிருந்தார். அவரது இலக்கியக் கூட்ட அறிக்கை கள். செய்திகளைத் தாங்கிவராத மல்லிகை இதழ்கள் மிகக்குறைவு மல்லிகையின் ஊடாக ஈழத்து இலக்கியத்தை அறிவுள்ள எதிர் காலச் சந்ததியினர் நிச்சயம் நெல்லை க. பேரன் என்ற படைப் பாளியை நினைவிற் கொள்வர்.

ஆக்க இலக்கியத்தின் பரிணாமக் கூறுகளான சிறுகதை, நாவல் கவிதை, நாடகம், விமர்சனம், பயணக் கட்டுரை, பேட்டிக் கட்டுரை, நடைச்சித்திரம். இலக்கியக் கூட்டறிக்கை எனப் பல வேறு அங்கங் களிலும் தனது ஆளுமையைப் பதிக்க முயன்றவர் பேரன்.

சிருஷ்டி இலக்கியத்தில் ஓய்வொழிச்சலின்றி உழைத்த அவரது சிறுகதைத் தொகுப்புகளான 'பட்டதாரி நெசவுக்குப் போகின்றாள்' (1975), 'சத்தியங்கள்' (1987) ஆகியவற்றை இலக்கிய உலகுக்கு அறுவடையாகத் தந்துள்ளார். அவரது நாவலிலக்கிய ஆளுமைக்குச் சான்றாக வீரகேசரிப் பிரசுரமான 'வளைவுகளும் நேர்கோடுகளும்' என்ற நாவல் 1978ல் வெளிவந்தது. தனது மத்திய கிழக்கு அநுபவத்தை வைத்து எழுதிய 'விமானங்கள் மீண்டும் வரும்' என்ற குறுநாவல் 1985ல் வெளிவந்தது. இரசிகமணி கனக செந்திநாதன் ஞாபகார்த்த குறுநாவல் போட்டியில் முதற்பரிசையும் பெற்றது இன்னும் நூலுருப் பெறாத பேரனின் இறுதிப் படைப்பு 'அந்த ஆறு நாட்கள்' என்ற குறுநாவல் கையெழுத்துப் பிரதியாக உள்ளது. இவை தவிர, அவரது கவிதைகள் 'பேரன் கவிதைகள்' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளன. 'சந்திப்பு' என்ற பேட்டிச் சிறு நூல் 1986ல் நூலுருப் பெற்றது. பேரன் சிருஷ்டி இலக்கியத்தில் மட்டுமன்றி சொற்பொழிவு, நாடக அரங்கு என்பவற்றிலும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

பேரனது படைப்புகள் யாவுமே மானுடத்தின் இருண்ட பகுதியை படம்பிடித்துக் காட்டுபவை. மக்களின் அன்றாட வாழ்வியக்கத்தின் நிகழ்வுகளைக் கருப்பொருளாகக் கொண்டவை. தனது படைப்புகளினூடாக அடிநிலை, மத்தியதர வர்க்க மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை வெளிக்கொணர்வதில் வெற்றி கண்டவர் பேரன். ஒரு காலகட்டத்தில் அவரது ஆக்கங்கள் தொகையளவில் பத்திரிகை உலகை ஆக்கிரமித்திருந்ததை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இது அவரது படைப்புக்கள் மீதான தரப்பிரச்சினையை விமர்சகர்கள் மத்தியில் கிளப்பியிருந்ததெனினும், தன் படைப்பாற்றலில் அதீத நம்பிக்கை வைத்திருந்த பேரன், இந்த நக்கீரப்பார்வைகள் பற்றி அதிகம் அலட்டிக் கொண்டதில்லை. இச்சந்தர்ப்பத்தில் பேரனது கதைகள் பற்றி பேராசிரியர் க. கைலாசபதியின் கருத்து மனங்கொள்ளத் தக்கது. 'இக்கதைகளில் கலையழகோ. கருத்து வேகமோ போதாது என்று கூறக்கூடியவர்களும் ஒன்றை ஒத்துக் கொள்வார்கள் என நம்புகிறேன். இன்று அதுவும் எழுபதுகளிலே எமது நாட்டிற் காணப்படும் சில வாழ்க்கைப் பிரச்சினைகளை நுணுக்க விபரங்களோடு ஆசிரியர் சித்திரிக்க முயன்றிருக்கிறார்''

அதிகமாக எழுத வேண்டுமென்ற உந்துதல் பெற்ற சிருஷ்டி கர்த்தாவாகவும், அதே வேளை இறுதிவரை செய்தியாளராகவும் இரு முகத் தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்த பேரனது படைப்புகளில் விவரணத்தன்மை, எளிமையான சொற்களைக் கொண்ட நெகிழ்வான நடை என்பவை தவிர்க்க முடியாத பண்புகளாகின. பேரனிடமிருந்த முக்கிய பண்பு தனது நூலுருப் பெற்ற படைப்புகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று விற்றுத் தீர்த்துவிடும் அசாத்தியத் திறன் படைத்தவராக விளங்கியமையாகும்.

பேரனுக்கு இலக்கிய உலகில் பகைவர்கள் என்று யாரும் இருக்கவில்லை. இலக்கியப் பூசல்கள், கோஷ்டி வாதங்கள் என்பவற்றி

லிருந்து கடைசிவரை விலகி நின்றவர். எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் நேயமுள்ளவர். எல்லோருக்கும் நண்பனாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர்.

அவரது கலை இலக்கிய வாழ்வுக்கு ஆதாரமாக அமைந்தது அவரது சமூகத் தொடர்பியக்க ஈடுபாடாகும். அந்த வகையில் நெல்லியடி சனசமூக நிலையத் தலைவராகவும். தான் கல்வி கற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்திலும் பழைய மாணவர் சங்கத்திலும் முக்கிய உறுப்பினராக இருந்து சமூக மேம்பாட்டுக்காகவும் தன்னாலான பணிகளைச் செய்தவர்.

பருத்தித்துறையை மையமாகக் கொண்டு டாக்டர் எம். கே. முருகானந்தத்தினதும், நண்பர்களதும் முன் முயற்சியால் இயங்கி வரும் 'அறிவோர் கூடல்' பல்துறை சார்ந்த அமைப்பிலும் ஆர்வமுடன் தன்னை இணைத்துக் கொண்டிருந்தவர். இவை அவரை சமூக இசைவாக்கமுள்ள படைப்பாளியாக மேலுயர்த்தியது.

கடந்த வருடம் 15-07-1991 திங்கள் அன்று நடு இரவில் கூற்றுவனாக வந்த எறிகணையால், நெல்லை க. பேரனும் அவரது குடும்பத்தவரான அன்பு மனைவியும், அருமைச் செல்வங்களும் காவு கொள்ளப்பட்டனர் என்ற செய்தி, பேரனைப் படித்த, பழகிய, அறிந்த நெஞ்சங்களுக்கு தாங்க முடியாத துயரத்தையும். அதிர்ச்சியையும் தந்தது, வீட்டில் குடும்பத்துடன் அசந்து தூங்கிக் கொண்டிருந்த வேளையில் காட்டுமிராண்டித்தனமான முறையில் அந்த அப்பாவி உயிர்கள் கணப்பொழுதில் பறிக்கப்பட்டன. குடும்பத்தில் பாசப் பிணைப்புடன் இருந்தவர் இறுதியில் தன் அகால மரணத்திலும் கூட பிரிய மனைவி, பாசமிக்க குழந்தைகளைத் தன்னுடன் அணைத்துச் சென்றமை அவரது மறைவில் மேலோங்கி நிற்கும் நெஞ்சை உருக்கும் சோகமாகும்.

1946ம் ஆண்டு டிசம்பர் 18இல் பிறந்த பேரன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ் தொழில் நுட்பக் கல்லூரி, யாழ் சட்டக் கல்லூரி என்பனவற்றில் தனது கல்வியைக் கற்றார். 1966ம் ஆண்டு நடுப்பகுதி முதல் தபால் — தந்தி திணைக்களத்தில் அரச ஊழியராகக் கடமையாற்றினார்.

இன்றைய சமகால அவல நிகழ்வுகளின் நிதர்சனக் குறியீடாக பேரனதும், அவரது குடும்பத்தினரதும் அகால மரணம் அமைந்து தார்மீக உலகின் மனச்சாட்சியை உசுப்பிவிட்டது.

ஈழத்து இலக்கிய உலகுக்கு தன்னாலான பங்களிப்பினை வழங்க அவாவுற்றிருந்த பேரனைப் பற்றி கர்த்திரமான மதிப்பீட்டினைச் செய்வதற்கு ஏற்ற வகையில் — இலக்கியப் பணியில் தன்னை மேல் நிறுத்திக் கொள்ள நீடித்த காலம் எம்முடன் வாழாது பிரிந்து சென்றமை எமது துரதிர்ஷ்டமாகும்.

பல்துறை சார்ந்த ஆர்வமும். விடா முயற்சியுமுள்ள சிருஷ்டி கர்த்தாவாக பேரனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மானுடத்தின் மனச்சாட்சி குறித்த பிரச்சனைகளை இனம் கண்டு நேர்மையுடனும், சமூகப் பிரக்ஞையுடனும் தனது பேனாவை நகர்த்திச் சென்றவர் என்ற வகையில், பேரன் இலக்கிய உலகில் என்றும் நினைவு கூரத்தக்கவர்.

## வண பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளின்

# மணிவிழா ஆரம்பம்

ச. தில்லைநாதன்



பிரபல கல்விமானும், மக்கள் தொண்டரும், சம்பத்திரிசியர் கல்லூரி 'றைக்ட'ருமான வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் மணிவிழா ஆண்டு 30-6-92ல் ஆரம்பமானது.

இம் மணி விழா ஆண்டில் அன்னாரைத் தகுந்த முறையில் கௌரவிக்கும் முகமாக மணிவிழாக் குழுவென்றும் அமைக்கப்பட்டுள்ளது. தலைவராக யாழ். மாநகர ஆணையாளர் திரு. வா. பொ. பாலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு. ம. யேசுதாசன் அவர்களும், பொருளாளராக திரு. ப. நாகநாதன் அவர்களும் பொறுப்பு வகிப்பார்கள். உறுப்பினர்களாக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் 'நந்தி', பேராசிரியர் அ. சண்முகதாஸ், அருட்திரு கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன், திரு. இ. ஜெயராஜ். டொமினிக் ஜீவா, டாக்டர் எம். கே. முருகானந்தன், திரு. க. வேலாயுதம், செங்கை ஆழியான் ஆகியோர் இயங்குவார்கள்,

ஆரம்ப நிகழ்ச்சியாக மணிவிழாக் குழுவினர் 30-6-92 அன்று நல்லை ஆதீனத்தில் அன்னாருக்கு தேநீர் உபசார விருந்தொன்றை மணிவிழாச் சபைத் தலைவரின் தலைமையில் நடாத்தினார்கள்.

விழா ஆரம்பத்தின் அடையாளமாக அடிகளாருக்கு முதுபெரும் எழுத்தாளர் வரதரும், நாவலாசிரியர் செங்கை ஆழியானும் மலர் மாலை அணிவித்து வாசலில் இருந்து அழைத்து வந்து இருக்கையில் அமரச் செய்தனர்.

ஆசிரிய — ஆசிரியைகள், குருப்பிரசாதிகள், நண்பர்கள், இலக்கியவாதிகள், அடிகளிடம் அன்பு பாராட்டும் நெருக்கமானவர்கள், அவரது தாயார், தாய் மாமனான குருவானவர் ஆகியோர் மண்டபம் நிறையக் குழுமியிருந்தனர். மண்டபம் களைகட்டியிருந்தது.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளும் அடிகளுக்குப் பக்கத்தே அமர்ந்திருந்தது பார்வைக்குத் தனிப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது.

தலைவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது: மணிவிழாக் குழுவிற்கு என்னைத் தலைவராகத் தேர்ந்ததையிட்டு உண்மையாகவே எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஜோசப் அடிகள் இயங்குவதில் இளைஞனைப் போலத் துடிப்பானவர். அவரது உற்சாகத்தையும் ஆளுமையையும் பல தடவைகள் நேரில் பார்த்து வியந்தவன் நான். பல கட்டங்களில் அதிசயித்துப் போயுள்ளேன். அன்னாரது சேவை இனித்தான் மக்களுக்குப் பூரணமாகக் கிடைக்க வேண்டும்' என்றார்.

அடுத்து மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பேசும்போது: 'அடிகளாரைப் பல ஆண்டுகளாக எனக்குத் தெரியும். அவரது தெய்வீக குணத்தையும் ஆன்மீக பலத்தையும் நன்கறிந்தவன் நான். இவரது இடையறாத உழைப்பைக் காணும்போது எனக்குக் காமராஜ் நாடார் தான் ஞாபகத்துக்கு வருவார். உழைப்பு ஒன்றினால் மாத்திரம் உயர்ந்து பாதர் லோங் அவர்கள் அலங்கரித்த சம்பத்திரியார் கல்லூரியின் கல்விச் சிம்மாசனத்தில் 13 ஆண்டுகளாக நிலையாக நின்று நிலைத்தவர் இவர். கிறிஸ்தவத் துறவி ஒருவரின் மணிவிழா நல்லை ஆதீனத்தில் ஆதின முதல்வரின் முன்னிலையில் நடைபெறுவது ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க சங்கதியாகும்' என்றார்.

அடுத்து பேராசிரியர் சண்முகதாஸ் பேசினார்: 'சஷ்டியப்த பூர்த்தி' என்பது இந்துக்கள், அதிலும் கணவன் மனைவி கொண்டாடும் ஒரு விழாவாகும். இன்று பெரும் புதுமை. கிறிஸ்தவத் துறவி ஒருவருக்கு மணிவிழா எடுக்கின்றோம். தகும். சகல தகுதியும் நிரம்பப் பெற்றவர் அடிகளார், பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் அவரது பங்குப் பணியை நான் அவதானித்துள்ளேன், பெருமைக்குரிய இவரது மணிவிழா ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்வதையிட்டு நான் பெருமிதமடைகின்றேன்' என்றார்.

கடைசியாக திரு. இ. ஜெயராஜ் பேசினார்: 'முன்னர் கிறிஸ்தவத் துறவிகளின் செயல்பாடுகளில் சிறிது சந்தேகம் இருந்தது. தயக்கம் இருந்தது. சமீபத்தில் துர்க்காதேவி ஆலய அழிப்பு எதிர்ப்பு நிகழ்ச்சிகளின் ஊர்வலத்தில் அடிகள் பங்கு கொண்ட ஆர்வத்தைப் பார்த்ததும் எனது சந்தேகங்கள் அநேகம் தீர்ந்து போய் விட்டன. அவருடன் அநேக கிறிஸ்தவத் துறவிகள் தெருவுக்கு இறங்கி மக்களுடன் மக்களாக நின்று ஆலயங்களைப் பாதுகாப்பதில் காட்டிய ஆர்வம் என் மனதைத் தொட்டது. அடிகள் நான் பார்த்தவரை ஓர் அற்புதமான துறவி. துறவிகள் தான் இன்று இந்தச் சமூகத்தில் சரியானவைகளை அடித்துச் சொல்லும் திறன் படைத்தவர்கள். அடிகளார் அதில் முன் நிற்பவர்' என்றார். திரு. த. கலாமணி நன்றியுரை கூறினார்.

ஒரு மகிழ்ச்சியான மாலைப் பொழுது, தக்க சான்றோர் ஒருவரைக் கௌரவித்ததின் மூலம் இனிதே கழிந்தது.

# நீளும் பாலை

க. சட்டநாதன்

அரசர்தான் அந்த ஆசையைத் தூண்டிவிட்டார். வீட்டில் எல்லாருக்கும் விருப்பமிருந்தது. ஐயாதான் கொஞ்சம் அருக்காணியம் காட்டியமாதிரி இருந்தது. அவரது அபிப்பிராயத்தை யார் கேட்கிறார்கள்? அக்கா, காசுக்குத் தான் பொறுப்பு என்றதும் ஐயா பேசாமல் இருந்தார்.

''ஒரு பத்துப்போத்தில் கறக்கிற பசுபோதும்......''

அம்மா அபிப்பிராயம் சொன்னாள்.

''மூவாயிரமாவது வேணும். எதுக்கும் ஆயத்தமாயிருங்க...... நாளைக்கு வாறன்......''

அரசர் விடைபெற்றுக் கொண்டார்.

அவரைப் படலைவரை துரத்திச் சென்ற தம்பி ரகு 'கட்டாயம் வாருங்க மாமா...' என்றான்.

''ஒரு பசுமாடு போதுமா?'' இவன் அக்காவைக் கேட்டான்.

''இப்ப ஒரு பசு வரட்டும், பொறுத்து இன்னும் இரண்டு வாங்குவம்''

அக்காவைப் பார்த்து இவன் திருப்தியாகச் சிரித்துவைத்தான்.

பட்டம் பெற்று இரண்டு வருடங்கள் ஆகியு போதும், வேலை கிடைப்பதாக இல்லை. சும்மா இருக்க வேண்டாமே என்று தான் இந்த ஏற்பாடு.

'பத்துப் பசுக்களாவது வந்து ஒரு பண்ணை மாதிரி ஆகிவிட்டால்! வேலைக்குப் போக வேண்டுமா என்ன? அதோடை ஒரு நூறு வெள்ளைலைக் கோன்... ஆர். ஐ. ஆர். கோழிகளும் வளர்த்தால்......'

அவன் கனவு கண்டான்.

வரதாவின் குரல் கேட்டது. இரசாயன பாடத்தில் அக்காவிடம் ஏதோ சந்தேகம் கேட்க வந்திருக்க வேண்டும். வரதா ஏ. எல். எடுக்கிறாள். மூன்றாவது முறையாக. பாஸ் பண்ணி, ஜெனரல் டிகிரியாவது செய்ய அவளுக்கு விருப்பம் இருந்தது.

வரதா இவனுக்குத் தான் என்பது— சின்னவயதிலிருந்தே— இவனளவில், மனதில் நிச்சயமாகி விட்டது.

மாமா பெண். சொந்த மச்சாள். கண்முன்னால், இமை கொட்டாமல் பார்த்திருக்க வளர்பவள். இவனை மீறிப் போய்விட முடியுமா என்ன?

வரதாவுக்கும், அவனுக்கும் அவசரமில்லை. அக்கா தான் பாவம். அவளுக்கு முப்பது வயதாகிறது. வரன் ஏதும் ஆகிவரவில்லை. அப்படி ஏதாவது வந்தாலும் அவர்கள் கேட்கும் சீதனம், டோனேசன், அதற்கெல்லாம் எங்கே போவது? ஐயா

உழைத்து, கொட்டிக் குவித்து வைத்ததையா எடுத்துக் கொடுக்க முடியும். உழைப் பென்றாலே ஒதுக்கம் கொள்ளும் பிறவி அவர். அவரை நம்பி, அவன் என்ன செய்துவிட முடியும். எல்லாவற்றிற்கும் நிவாரணி இந்த மாட்டுப் பண்ணை தான் என அவனுக்குத் தோன்றியது.

இந்த ஜெபம் சில சமயங்களில் வரதாவின் நினைவையே புறமொதுக்கி, ஆக்கிரமித்துக் கொள்வது இவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

வரதா பாடம் முடிந்து, இவனைக் கடந்து போனாள். போனவள், நின்று திருப்பிப் பார்ப்பது போலிருந்தது.

இவனும் திரும்பிப் பார்த்தான்.

அவள் ஒடிசலாக இருந்தாள். கையும் காலும் மெலிதாக, குச்சி குச்சியாக இருந்தன. முகத்தில் மட்டும் அப்படி ஒரு களை கொட்டிக்கிடந்தது. அந்த அகன்ற கண்கள், கூரான மூக்கு, சிவந்த திரட்சியான உதடுகள், சிரிக்கும்போது முரசுவரை தெரியும் ஈறுகளின் அழகு. எல்லாவற்றையும் தொட்டுத் தொட்டுப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

''உம்மடை கள்ளம் எனக்குத் தெரியும்......'' வரதாவின் குரல் மிக நெருக்கத்தில் கேட்டது.

''கள்ளமோ........? என்ன கள்ளம்.........?'' இவன் சற்று உரத்த குரலில் கேட்டான்.

''என்ன கள்ளமெண்டு தெரியாதோ. புதுப்பெட்டை மணம் உமக்குப் பிடிக்கும் அதுதான்...''

அவள் சிரித்தபடி நகர்ந்து போனாள்.

அவள் போனதும், இவன் எழுந்து அக்காவைத் தேடிப் போனான்.

அக்கா டி. எச். லொறன்ஸ்ஸோடு இருந்தாள். இவனைக் கண்டதும் புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு, நிமிர்ந்து பார்த்தாள்.

''ஒரு பசுமாடு போதுமா; நாலஞ்சு மாடாவது வேணும்... மினக்கெடுகிறதுக்கு ஒரு பலன் வேணும்'' இவன்....

''அகலக்கால் வைக்கேலுமா.. ...? உன்ரை திட்டத்துக்கு இருபது இருபத்தைஞ்சாவது வேணும்....... நாம எங்க போறது?''

''ஏதன் மாறிக்கீறிச் செய்தாலென்ன?''

''மூவாயிரத்தோட்டை என்ரை காப்புச் சோடியளையும் தர்றன், இரண்டு பசுக்களை வாங்குவம், பிறகு பார்க்கலாம்''

''மாமாற்றைக் கேட்டாலென்ன?''

''பெரிய கொம்பு முளைச்ச பணக்காரர் அவர். அவரிட்டைப் போய்ப் பல்லிளிக்கப் போறயா? வரதா இஞ்சை... நம்ம வீட்டுக்கு வந்து போறதே அந்தச் சீமானுக்குப் பிடிக்கேல்லை...''

''சிவலிங்கத்தாரிட்டை....?''

''அவராலை ஏலாமைப் போச்சு...... தருமுதான் இப்ப எல்லாம் பாக்குதாம். ஊரில பசையுள்ள மனிசன் இப்ப அவன் தான்''

''வீடுவளவை ஈட்டுக்குக் கேட்டுப்பாப்பம்?''

''ஈட்டுக்கா......! கொண்டிசன் அறுதிதான் கேப்பினை''

''மூண்டு வருஷத்துக்கு எழுதினா மீட்டுப்போட்டலாம்''

அக்காவை நம்பிக்கையோடு பார்த்தான். பண்ணை பற்றி, மனதில் கிடந்ததையெல்லாம் கொட்டிக் கொட்டி, அவளுக்குச் சொல்லவேணும் போலிருந்தது. 'அக்கா பகிடி பண்ணுவாள் பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று எழுந்து, இவன் வெளியே நடந்தான்.

●

## 2

''இவ்வளவு காசு எதுக்கு?'' தருமு தான் கேட்டான்.

அக்கா பதில் சொல்லாமல் இவனைப் பார்த்தாள். இவன் தான் அதற்குப் பதில் சொன்னான்.

''ஒரு மாட்டுப் பண்ணையும், கோழிப் பண்ணையும் போடுற திட்டம்''

''போடுற காசு வருமா...? வந்தாச்சரி.... கொண்டிசனாத் தான் எழுத வேணும். நொத்தாரிட்டைச் சொல்லி ஏற்பாடு செய்யுங்க... வாற சனி பணம் எடுக்கலாம்''

அக்கா எழுந்து கொள்ள, இவனும் எழுந்து கொண்டான்.

''இருங்க. தண்ணி குடிக்காமலா........'' என்ற தருமு, உள்ளே பார்த்து 'அம்மா' என்று குரல் கொடுத்தான்.

''தம்பி... பி. ஏ. அக்கா?''

''பி. எஸ். ஸி.''

''எங்கை இப்ப படிப்பிக்கிறா......?''

''கரம்பன் சொண்வென்ட்'' அக்கா பதில் சொன்னாள்.

''செபஸ்தியார் கோயிலுக்கு முன்னாலை இருக்கிற......''

''அது தான்......!''

''மகேஸ்...! ஐந்தாம் வகுப்பிலைநதன் உங்களோடை சரஸ்வதியில படிச்சது ஞாபகம் இருக்கா......?''

அக்காவுக்கு மெலிதாக ஞாபகம் இருந்தாலும், உரையாடலைத் தொடர விரும்பவில்லை என்பதை அவளது முகம் காட்டியது.

''இருங்க... ஒரு நிமிஷம்!'' என்று எழுந்து உள்ளே போனான் தருமு.

'எவர்சில்வர்' ட்றேயில் அவனே தேநீர் கொண்டு வந்து உபசரித்தது அக்காவுக்குச் சங்கடமாக இருந்திருக்க வேண்டும். எழுந்து ரீயைப் பெற்றுக்கொண்டவள், 'ஏன் உங்களுக்கு இந்தச் சிரமம்' என்றாள்.

''சிரமமா? நோ இற்ஸ் ஏ பிளெஷர்''

அவனது ஆங்கிலம் சுத்தமாக இருந்தது.

'பெரிய பிஸ்னெஸ் புள்ளி. புத்தகப் படிப்பால்தான் இதெல்லாம் வரவேண்டுமா என்ன...?' என்று இவன் நினைத்துக் கொண்டான்.

இவர்கள் விடைபெற்றுக் கொண்ட பொழுது, 'கேற்' வரை வந்து தருமு விடை தந்தான்.

''அப்ப சின்னப் பெட்டையா மாங்காய்ப் பிஞ்சு பொறுக்க வந்தது... சின்ன வீடா இருந்தது... இப்ப எக்ஸ்ரெண்ட் பண்ணி மாளிகை மாதிரிக்கட்டியிருக்கிறான் தருமு. வீட்டுக்குக் கிழக்குப் பக்கம் பாத்தனியா... முப்பது பரப்புத் தோட்டம். அழகரிட்டை சுவடின காணி... முழுவதும் திராட்சையும் வாழையுமாய்க் கிடக்குது. நல்ல தண்ணிப் பூமி. அதுதான் பொன் கொழிக்குது''

''மட்டக்களப்பில் இரண்டு அரிசி ஆலை. கொழும்பில் புறக்கோட்டையிலை பலசரக்குக் கிட்டங்கி, பெற்றோல் பங்கும் பளையிலை இருக்கு. பணத் தோடை தான் பணம் சேரும். கடன்பட்டுப் பணக்காரனாகே லுமா.. ...?''

அவனது குரலில் ஆதங்கம்.

அதை மறுப்பது போல அக்கா சொன்னாள்.

''அப்படிச் சொல்லேலுமா? எல்லாம் புதுப்பணம் தான்...... எனக்குத் தெரிய சிவலிங்கத்தார் இஞ்சை, ஊரிலை, வங்களாவடி யிலை பெட்டிக்கடை வச்சுத்தான் பிழைப்பு நடத்தினவர்''

திடீரெனக் குரலைத் தாழ்த் திய அக்கா, ரகசியம் தோய்ந்த குரலில் தொடர்ந்து சொன் னாள்:

''இவன் தருமனுக்கு மட்டக் களப்பிலை ஒரு பெட்டை இருக்காம்''

''காதலா......? ஆளைப் பாத்தால் அழகா, மன்மதன் மாதிரித்தான் இருக்கிறான். பணக்காரனுக்கு காதல் வருமா? அங்க மில்லிலை வேலை செய் யிற பெட்டையா இருக்கும்''

அவனை ஆமோதிப்பது போல அக்கா ஏளனமா கச் சிரித்தாள்.

முதலாளி, தொழிலாளியின் மனைவியை வைத்துக் கொள் வான். விரும்பினால் அந்த ஏழை யின் மகளையும் வைத்துக் கொள்வான். எப்பொழுதோ ஏதோ புத்தகத்தில் படித்த ஞாபகம் அவனுக்கு வந்தது.

அக்காவிடம் இதையெல் லாம் விபரம் சொல்லிப் பேச முடியுமா என்ன? மௌனமாக நடந்தான்.

இருவரும் பட்டவேம்பு வைரவர் கோயிலைக் கடந்து பிரதான வீதியில் மிதந்தபோது மாமா எதிர்ப்பட்டார்.

''உதென்ன விசர் வேலை யள் நடக்குது. காசைக் கரியாக் கிற வேலையள். மாட்டுப் பண்ணை செய்து லாபம் வருமா? பேசாமை ஆரையும் பிடிச்சு, காசெண்டாலும் கொடுத்து, ஒரு வேலை வெட்டி தேடிறதைப் பாரும் தம்பி... பி. ஏ. படிச்சுப் போட்டு, ஊருக்க மாடு மேய் கவே போற''

மாமா தனது முயற்சியை கொச்சைப் படுத்துவது அவ னுக்கு எரிச்சலூட்டியது. கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னான்,

''வேலை கிடைக்கிற வரைக் கும் சும்மா இருக்க வேண்டா மெண்டுதான்......''

''சரி சரி... உங்கடை மூப் புக்குச் செய்யிறதைச் செய்து தொலையுங்க......''

''நல்ல வார்த்தையே இந்த மனுசன்ரை வாயிலை வராது போலை''

அக்கா அடங்கிய குரலில் குறைபட்டுக் கொண்டாள். அவ ளுக்கும் மாமாவின் பேச்சு எரிச் சலூட்டி இருக்க வேண்டும்.

மாமா இவர்களைக் கடந்து போக, இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

●

## 3

சூட்ஸ்ரெயின் யாழ் புகை யிரத நிலையத்தை அடைந்த போது இவன் விழித்துக் கொண் டான். ஒரு கிழமைக்கும் மேலா கக் கண்டியில் அலைந்த அலுப்பு அவனில் தெரிந்தது. காலையி

லேயே தூங்கி வழிந்தான். அது அவனுக்குக் கூச்சமாயிருந்தது. அரசரும், சுந்தரமும் சுறுசுறுப்பாக இருந்ததை அவன் அவதானித்தான்.

சுந்தரம் அம்மன் றோட்டில் மாட்டுப் பண்ணை வைத்திருப்பவர். பசுக்களின் குணம் குறி அறிந்தவர். 'அவரும் வந்தால் நல்லது' என்று அரசர் வற்புறுத்தியதை இவன் கனம் பண்ணி, அவரையும் கண்டிவரை அழைத்துச் சென்றிருந்தான்.

ட்ரெயின் நின்றதும் பசு மாடுகளை இலகுவாக இறக்க முடிந்தது.

ஏழுமாடுகள்; அம்பிட்டியிலும் மடுல்கலையிலும் கொள்வனவு செய்யப்பட்டவை. நான்கு பசுக்கள் ஐஷெயர். இரண்டு ஜேர்ஸி. மற்றது ஃப்றிசியன். உயர்சாதிப் பசுக்கள். இளம் பசுக்கள். கன்றுகள் ஏழும் நாகு. 'இன்னும் இரண்டு வருஷங்களில் பதினாலு பசுக்கள் பால் தரும்'. இவன் கணக்குப் பார்த்துக் கொண்டான்.

'பத்துப் பரப்புத் தோட்டக் காணி - ஐயாவின் முதிசம். இப்பொழுது எதுவுமே பயிரிடாமல் கலடுதட்டிக் கிடக்கிறது. வீடு வளவு அம்மாவின் சீதனம். வீடுவளவை ஈடுவைத்ததும் அம்மா எவ்வளவு ஆட்டம் கண்டுவிட்டாள். சின்ன வீடு தான். வளவும் தோட்டமும் பதினைந்து பரப்புக்கூடத் தேறாது, இதைவைத்து அக்காவுக்குக் கலியாணம் பேசமுடியுமா? அப்படி இப்படிப் பார்த்தாலும் ஒரு லட்சமாவது வேணும்...... பண்ணை நல்லா நடந்தாஒருலட்சமென்னஇரண்டு லட்சம் தரலாம். பணத்தின் பின்னால் போகும் மாமா கூட என் பின்னால் வரமாட்டார். வரதா அந்த இளமை ததும்பும் சௌந்தரியம் கூட என்னுடையவள் ஆகிவிடுவாள்'

''என்ன தம்பி பகற்கனவே. லொறி வந்திட்டுது, மாடுகளை லொறியிலை ஏத்த வேண்டாமே...?'' அரசர் கேட்டார்.

சிரமத்துடன்தான் பசுக்களையும் கன்றுகளையும் லொறியில் ஏற்ற முடிந்தது.

சுந்தரம் வேலணை வரை வந்து திரும்புவதாக ஏற்பாடு.

''சுந்தரம் உதவியாக, தனது பிழைப்பை எல்லாம் விட்டு வந்திருக்கிறார். ஒரு ஆய்ரமாவது அவற்றை கையிலை கொடுக்க வேணும்''

அரசர் இவனது காதைக் கடித்தார்.

இவன் சரி எனத் தலையசைப்பில் பதில் தந்தான்.

லொறி அல்லப்பிட்டியைக் கடந்து, கறுப்பாச்சி அம்மன் கோயிலடியில் வந்த பொழுது இவன் தன்னையறியாமல் கை குவித்துக் கொண்டான். அம்மனை மனதார வணங்கினான்.

மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியில் இறங்கிய அரசர் கற்பூரம் கொழுத்தினார். இவனும் இறங்கி விபூதி பூசிக் கொண்டான்.

அராலிச் சந்தியால் திரும்பியதுமே ஊர்மனை வந்தது. இவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். வீசிய சுகமான இளங்காற்று மனதுக்கு இதமாக இருந்தது.

மில்லடி ஒழுங்கையில் திரும்பியதும் குஞ்சி கண்டு சிரித்தாள். மகன் தில்லை லொறியின் பின்னால் ஓடிவந்தான்.

லொறி அஞ்ஞாத் தோட்டத்தின் கட்டோடு 'றிவேர்ஸில்' நிறுத்தப்பட்டது. புவனம்,

கைலை பெண்சாதி கமலம், லட்சுமி, தம்பு, நொச்சிக்காட்டுக் குணம், சிவராசா, கிளி, ராசா வாத்தியார் எல்லாரும் கூடிவிட்டார்கள்.

தூரத்தில் வரதா வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு முன்பாக இவனது தம்பி ரகு ஓடிவந்தான். அம்மாவும் அக்சாவும் படலையடியில் நின்றதை இவன் அவதானித்தான். ஐயாவைக் காணவில்லை.

'தலையில் எண்ணெய் தடவி, படியப் படிய வாரி மடித்து, காதில் பிச்சிப்பூவும் வைத்து, பர்வதம் வீட்டை போயிருப்பாரோ?' இந்த வயதில இப்படி ஒரு உறவா......'

அவனுக்கு மனக்கிலேசமாயிருந்தது. கொஞ்சம் துக்கமாகவுமிருந்தது.

பசுக்கள் கீழே இறக்கப்பட்டதும், நீண்ட பயண அலுப்புத் தீர, ஆகாயத்துக்கும் பூமிக்குமாக ஒரு துள்ளல் துள்ளின. கால்களை உதைத்து, உதறிக் கொண்டன. ரம்பண்டாவின் சிவப்பியின் கைக்கொடியை அரசர் தவறவிட்டு விட்டு, பசு தோட்டத்தைச் சுற்றி 'றவுண்டஸ்' அடிப்பதை பரிதாபமாகப் பார்த்தபடி நின்றார். அந்தப் பசுவைப் பிடிப்பதற்குச் சுந்தரம் தான் உதவினார்.

பசுக்களை வீடுவரை கொண்டு போவது பெரும்பாடாகப் போய்விட்டது.

''படலையாலை கொண்டு போகேலாது, வண்டில்த் தட்டியை அவிழுங்க அத்தான்''

ஐயாவைத் தான் அரசர் விழித்தார்.

ஐயாவைப் பார்த்தான், எதையோ பறிகொடுத்தவர் போல அவர் இருந்தார்.

இந்த முயற்சி எல்லாம் வீண் வேலை என்பது அவரது எண்ணம்.

'ஐயா நினைப்பது போல எல்லாமே பயனில்லாத முயற்சியா......? கனவாகக் கரைந்து போக வேண்டியவைதானா...?'

அவன் தொடர்ந்து நினைப்பதற்குப் பயம் கொண்டான்.

மாடுகளைக் கொட்டிலில் கட்டிய பின்னர் தான் அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

''அசல் கொட்டில், எவ்வளவு முடிஞ்சது......?'' சுந்தரம் கேட்டார்.

''நாலாயிரம்...'' இவனது பதில்.

''இதென்ன மாடுகள் இப்படிக் கொட்டிண்டு போயிருக்குதுகள்''

அம்மா கவலைப்பட்டாள்.

''இரண்டு நாளாகச் சாப்பாடு ஏதுமில்லை. நாலு தளிர் வைக்கலை கடிச்சதுகள். நல்லாச் சாப்பாடு வைக்கத் தேறீடும்......''

அரசரும் பேச்சில் கலந்து கொண்டார்.

தம்பி, பசுக்களைப் பயமில்லாமல் தொட்டுத் தொட்டுப் பார்த்து எண்ணினான்.

பின்பு இவனிடம் வந்து, தப்பும் தவறுமாக 'ஆறு பசுக்களா வாங்கினது அண்ணை' என்று கேட்டான்.

இவன் சிரித்தபடி 'இல்லை ஏழு பசுக்கள்' என்றான்.

அக்கா, இவனையும் பசுக்களையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றாள். அவள் கண்கள் பனித்திருந்தன. பக்கத்தில் வராதா, எப்பொழுதும் போல மலர்ந்த சிரிப்புடன்.

இவன் அவர்களை நெருங்கியதும், வரதா கேட்டாள்:

''எங்களுக்கும் பால் தருவியளா?''

''எங்க வரதாவுக்கு இல்லாமலா......?'' இவன் கலகலவென்று சிரித்தான்.

அக்காவும் சிரித்தாள்.

வரதா அவனை வைத்த கண் அகற்றாமல் பார்த்தபடி நின்றாள்.

அந்தப் பார்வையில் இழைந்த கனிவும் கருணையும் இவனைப் பரவசம் கொள்ள வைத்தது.

●

## 4

**பண்ணை** லாபமாக நடந்தது. இந்த இரண்டு மாத கால இடைவெளியில், சில்லறைக் கடன்களை அவனால் அடைக்க முடிந்தது.

நாளாந்தம் எண்பது போத்தல் பால் தந்த பசுக்கள், பசும் புல்லைக் கண்டதும் தொண்ணூறு போத்தல் தந்தன.

மழைகாலம் தொடங்கிவிட்டதால் கூதல் கடுமையாக இருந்தது. கச்சானும் கொண்டலும் மாறி மாறி வீசியது. பசுக்களுக்குக் காற்றுப் படாதவாறு கொட்டிலைச் சுற்றி சீ மா போட்டான்.

பெரிய கடன், ஈட்டுக்கடன் தான். அதை நினைத்துக் கிராமிய வங்கியில் இரண்டாயிரம் வரையில் காசு போட்டு வைத்திருந்தான்.

மனதில் கடன்பற்றி இருந்த பயம் சிறுகச்சிறுக விலகிய பொழுது, வரதாவைப் பற்றிய நினைவுகள் அவனை அலைக்கழித்தன.

வரதா பரீட்சை நன்றாகச் செய்யவில்லை. அவள் அது பற்றி அலுத்துக் கொண்டது இவனுக்குச் சந்தோஷமாயிருந்தது.

'பரீட்சையில் தேறி மூன்று ஆண்டுகள் பல்கலைக் கழகம், படிப்பு என்று அவள் அலைய வேண்டுமா என்ன ?' என்று இவன் நினைத்துக் கொண்டான்.

கண்முன்னால் அவள் குறுக்கும் நெடுக்கும் நடப்பதே இந்த ஜென்மத்துக்குப் போதும் போதும் என்றிருந்தது அவனுக்கு

'இது · சுயநலமா... பெண்ணைப் போகப் பொருளாய் மட்டும் பார்க்கும் நோய்க்கூறா'

அவனது குழம்பிய சிந்தனையில் தெளிவு இல்லாமல் இருந்தது.

பசுக்களுக்குப் பிண்ணாக்கு வைத்தபின், வைக்கலைப் பட்டடையில் இருந்து இழுத்து, நன்றாக உதறிப் போட்டுத் திரும்புகையில் அவனுக்கு ஆச்சரியம் வாழைத்தோட்டப்பக்கம் காத்திருந்தது.

அடர்ந்த காடுபோல் வளர்ந்திருந்த இதரை வாழை மரங்களுக்கிடையில் வரதா நின்றாள்.

மழை மெலிதாகப் பன்னீர் தெளித்தது. அதில் நனைந்தபடி அவள். அவனது வரதா.

நெருங்கிவந்தவன் அவளைப் பார்த்துக் கேட்டான்:

''என்ன வரதா...... மழையிலை நனைந்தபடி... ''

''மழையிலை நனைஞ்சு இந்த உடம்பு ஒண்டும் கரைஞ்சு போகாது...''

''கரைகிற மாதிரி இல்லைத் தான்: வயிரமாய்த்தான் இருக்குது...''

''சீ... என்ன இது. ஏதோ பூடகமாய்ச் சொல்லிற மாதிரி''

''உடைத்துச் சொல்லட்டுமா...?''

''சொல்லுங்க...''

''என்ரை வரதா... எனக்கு வேணும்''

''ப்பூ இதுதானா... இது எத்தனை நாளாய்ச் சொல்லிற விசயம்''

''எப்ப சொன்னனான்?''

''அது தான் போகேக்கையும் வரேக்கையும் உங்க கண்கள் சொல்லுதே செல்வம்''

''பெட்டை... என்னிலை உனக்கு விருப்பமிருக்கா...? நம்பிக்கை இருக்கா...?''

''நம்பிக்கையில்லாமலா..... இப்படி உங்களைச் சுத்திச் சுத்திப் பைத்தியம் மாதிரி அலையிறன்...''

''வரதா...'' என்று நெருங்கியவன், அவளது கரங்களை எடுத்து அன்புடன் முத்தமிட்டான்.

அவனை நெருங்கி நின்ற அவள், அவனது உயரத்திற்கு—குதிக்கால்கள் நிலத்தில் பாவாமல் நுனிக்காலில் — நின்றபடி அவனது கண்களிலும் உதடுகளிலும் முத்தமிட்டாள்.

கிணத்தடியில் வாளியின் அரவம். சடாரென ஒதுங்கிய வரதா, அவனைப் பிரிந்து, வாழைப் புதர்களின் பக்கம் போனாள்.

இவன், அவள் போகும் திசையையே வெறித்துப் பார்த்தபடி நின்றான்.

ஏனோ அவனுக்கு அப்பொழுது அக்காவின் ஞாபகம் வந்தது.

இதயத்தின் உள் நாளங்களில் ஏதோ விண்டதான ஒரு வேதனை அவனுள் பரவியது. 'அக்காவின் திருமணம் கூட கனவாகிக் கானலாகி விடுமோ...?'

அவன் கவலை தோய்ந்த மனத்துடன் வானத்தைப் பார்த்தான். சூழவந்த கருமேகங்கள் கனத்த மழையின் வரவைக் கட்டியம் கூறின.

●

## 5

பங்குனிமாதம், வெய்யில் கடுமையாக இருந்தது. புல்நுனி கருகி, பச்சைக் கம்பளமாயிருந்த வயல் தடங்கள் கருமை கொண்டு விட்டன. இப்பொழுது பசுக்களுக்குப் பசும்புல் கிடைப்பது அரிதாகி விட்டது. காலையும் மாலையும் கட்டாந்தரையில் இவனும் அம்மாவும் புல் செருக்குவதில்தான் காலம் கழிகிறது. வறண்ட உவர்ப்புல்லை சீண்டுவதற்கே பசுக்கள் தயக்கம் கொண்டன. பால் தருவதையும் அவை திடீரெனக் குறைத்துக் கொண்டன.

நாப்பது போத்தலுக்குமேல் ஒரு துளிகூட இல்லை என்ற நிலை.

பசுக்களுக்குத் தேவையான பிண்ணாக்கு, தவிட்டுச் செலவுக்கே பண்ணை வருமானம் மட்டுமட்டாய் இருந்தது.

பசுக்கன்றுகளும் போதிய பாலும் உணவும் இல்லாமல் கறாளை பத்திப்போயின. இரண்டு வருடங்களில் பதினாலு பசுக்கள் என்ற அவனது கனவு கண் முன்னாலேயே கலைந்து போகும் அபாயத்தை உணர்ந்தான்.

அவனுக்குத் துக்கமாக இருந்தது. எல்லாவற்றையும் இழந்த வெறுமை உணர்வே அவனுள்

மிஞ்சியது. அம்மா மூக்கால் அழத் தொடங்கி விட்டாள். ஈட்டுக்காணி தருமுவுக்கே ஆகி விடுமோ என்ற பயம். எல்லாருடைய மனதையும் கலங்க வைத்தது.

வழமைபோல ஐயா மட்டும் எதிலும் பட்டுக் கொள்ளாமல் நடந்து கொண்டார். பர்வதத்தை மட்டும் அவரால் மறந்துவிட முடியவில்லை.

அன்று ஞாயிறு. லீவு நாள். அக்கா நன்றாகத் தோய்ந்தபின் இள வெய்யிலில் தனது கூந்தலை உலர்த்தியபடி நின்றாள்.

'அக்கா எவ்வளவு வடிவு: உயரம்... அடர்த்தியான கரிய புருவங்களின் கீழ் சுடரும் நீண்ட பெரிய கண்கள். அழகான மூக்கு. உடைந்து நெகிழத்துடிக்கும் முறுவலை எப்பொழுதுமே தாங்கி நிற்கும் சிவந்த உதடுகள். முற்றிய கோதுமையின் செழுமையான நிறம். நிதானம் தப்பிப் பேசாத சுபாவம். எவ்வளவு மென்மையான இயல்புகளைக் கொண்டவள் இவள். இவளிடம் அதிசயமாக இப்பொழுது ஒரு படபடப்பு கோபம் எல்லாம் எப்படி வந்தது. வீட்டிலுள்ள நெருக்கடியும் இயலாமையும் அவளையும் தொட்டிருக்க வேண்டும்.'

அக்காவைக் கடந்து இவன் சமையலறைப் பக்கம் போனான்

இவன் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது. அக்காவும் சாப்பிட வந்தாள். அவள் கோப்பையைக் கழுவி எடுத்து நிமிர்ந்த பொழுது, அம்மா புலம்பியது கேட்டது.

''என்ரை பிள்ளையளைச் சொதியும் சோறும் தின்ன வைச்சுப்போட்டுதுகள் இந்தக் கோதாரி விழுந்த மாடுகள்...... சம்பலும் சோறும் தின்னிற விதியே என்ரை குஞ்சுகளுக்கு. நாக்குக்கு ருசியாய் கறி புளி திண்டு எத்தனை நாளாய்ப் போச்சு... கையிலை மடியிலை உள்ளதெல்லாத்தையும் இந்த மாடுகள் விழுங்கிறதெண்டால்''

அக்கா அம்மாவைப் பார்த்துச் சொன்னாள்:

''பேசாமலிரம்மா! முடியிற வரைக்கும் பாப்பம். ஏலாதெண்டா மாடுகளை வித்துப். போட்டு ஈட்டை மீட்கலாம் தானே...''

அவனுக்குப் புரைக்கேறியது. அக்கா எழுந்து வந்து சிரசில் தட்டியபடி:

''என்னடா துக்கமா? நாம நினைக்கிறது எது நடக்குது... ஏழைகள் எதுவுமே ஆசைப்படக் கூடாது. சாண் ஏறினா முழஞ் சறுக்கிற வாழ்க்கை நம்முடையது ஒண்டு போனா இன்னொரு தொழிலொண்டு செய்ய எங்களிட்டை பணமா இருக்கு''

''அக்கா என்ரை ஆசையள் எல்லாம் இப்படிக் கைநழுவி... உன்னை ஒரு வசதியான இடத்திலை குடுக்க ஆசைப்பட்டன். வரதா அந்தப் பெட்டை என்னையே நம்பி...''

அவன் விம்மினான்.

''சத்தம் போடாதையடா. அம்மாவுக்கு வரதாவின்ரை கதை தெரியாது. மனிசி மாற்றுச் சம்மந்தம் அது இதெண்டு பிசத்திக் கொண்டு திரியுது''

அவன் அரைகுறையாகச் சாப்பிட்டுவிட்டு, கைகளை அலம்பிக் கொண்டு மாட்டுக் கொட்டில்ப்பக்கம் போனான்.

நாலு பசுக்கள் — நம்பண்டரவின் ஜேர்ஸி, கருஞ்சிவப்பி, முளிச்சிவப்பி, கொம்பன்புள்ளி— கண்டுபட்டுவிட்டன. ஃபிரிசியன் புள்ளி, மாட்டைத் தேடி காலை

யிலிருந்து கமறுகிறது. செயற் கைக் கருந்தரிப்பு நிலையம் மூடிக்கிடப்பதால் ஒண்டும் செய்ய முடியவில்லை.

அம்மா ஃபிரிசியனை கொட் டிலில் இருந்து அவிட்டு, வெளியே மாமரத்தில் கட்டி விட்டு கிணற்றடிப் பக்கம் போனாள்.

ஃபிரிசியன் மாமரத்தடியில் சக்கரப்பாண்டி ஆடியது. 'நாரந் தனை ஸ்ரட் சென்ரருக்குப் பசு வைக் கொண்டு போனால் என்ன...?' என்று இவனுக்குத் தோன்றியது.

சேட்டைப் போட்டுக் கொண்டு புறப்பட்ட இவனைப் பார்த்து அக்கா கேட்டாள்:

''எங்கை தம்பி...!''

''நாரந்தனைக்கு... ஸ்ரட் சென்ரர் வரைக்கும். ஃபிரிசியன் பாடாய்ப் படுத்துது, போயிற்று உடனை வாறன். அம்மாவைப் பாலைக் கறக்கச் சொல்லு...''

இவன் மாட்டை அவிழ்த்த பொழுது, அது உன்னியதில் நிலை தடுமாறி விழுந்தான்.

ஓடிவந்த அக்கா, இவனைத் தடவியபடி ''என்னடா இது... அடிபட்டிட்டா? கொம்புக் கயிறு போடு'' என்றாள்.

அவன் கொம்புக் கயிறு போட்டு, மாட்டை அவிழ்த்துக் கொண்டு போவதை அக்கா பார்த்துக் கொண்டு நின்றாள்.

'இந்த மிருகங்கள் வாயில் லாத பிராணிகளா? இல்லை... தங்கள் தவிப்பை எவ்வளவு அழகாக இவைகளால் காட்ட முடிகிறது. மனிதர்கள் தான் அடக்கி, உள்ளில் உக்கி, குமுறி அடங்கிப் போக வேண்டியிருக் கிறது'

தறிகெட்ட மனதின் நினை வுகள். அவளுக்குக் கூச்சமாக இருந்தது. அதே நேரத்தில் பீறிட்டு வந்த சிரிப்பை அவளால் அடக்கவும் முடியவில்லை. அவது வாய்விட்டு, விழுந்து விழுந்து சிரித்தாள்.

''என்ன சிரிப்பும் கனைப் பும்...!'' அம்மாவின் அதட்டல் அவளது உணர்வுகளைச் சம நிலைப்படுத்தியது.

●

## 6

பாடசாலை விட்டதும் அவள் வெளியே வந்தாள். அவள் பத்து நிமிடங்களில் செபஸ்தி யார் கோயில் சந்திக்குப் போனால்தான் 780 எண் பஸ் ஸைப் பிடிக்க முடியும். மூன் றரை பஸ்ஸை விட்டால் ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும்.

அவள் சந்திக்கு வந்து இரு பது நிமிடங்களாகியும் பஸ் வரா தது அவளுக்கு ஏமாற்றமாயிருந் தது. 'நாலரை வரைக்கும் இங்கு தவமியற்ற வேண்டுமா? என்ன? அவள் அலுத்துக் கொண்டாள்.

வீட்டுக்கு அந்தத் தொல் லைகளின் மத்தியில் போய் நிற் பதிலும் பார்க்க, இது பரவா யில்லை என்று தான் அவளுக் குத் தோன்றியது. வீட்டுச் சூழ லிலும் பாக்கப் பாடசாலை அவ ளுக்குப் பிடித்தமானதாய் இருந் தது. அம்மாவின் தொண தொணப்பு. ஐயாவின் எதிலும் பட்டுக் கொள்ளாத பாராமுகம். தம்பி செல்வத்தின், பொதி மாடு போன்ற பலன் ஏதுமற்ற உழைப்பு. அவளது கவலைகள். இவை எல்லாவற்றிலுமிருந்து தூரப்படவே அவள் மனது துடித் தது. சின்னவன் ரகுவின் பிரிய மும், குழந்தைத்தனமும் தான் ஓரளவு ஜீவனை, உயிர்ப்பை

அந்த வீட்டில் மீதம் வைத்திருப்பதாய் அவளுக்குத் தோன்றியது.

'செல்வம் என்ன செய்யப் போகின்றான். எவ்வளவு ஆசைகளோடும் கனவுகளோடும் இந்தப் பண்ணையை ஆரம்பித்தான். பண்ணையால் கடன் தான் மிஞ்சியிருக்கிறது. அக்கா... அக்கா என்று சுத்திச் சுத்தி வருபவன் ஏதோ குற்ற உணர்வுடன் என்னைக் கண்டதும் ஒதுங்கிக் கொள்ளுகின்றானே... அவன் உழைத்து, சீதனம் தந்து, எனது வாழ்வு மலர அவன் கண்ட கனவுகள்... வரதா...... இவனுக்காகக் காத்திருப்பாளா? மாமா, படிப்பு இருந்தாலும் நொடிந்து போன, பிழைக்கத் தெரியாத இவனை, இந்தப் பிள்ளையை மகளுக்கு ஏற்றுக் கொள்ளுவாரா? ஒரு வேளை ஒதுக்கி விட்டால் இவனால் தாங்கிக் கொள்ள முடியுமா? பேசாமல் மாடுகளை வித்துப் போட்டு ஏதாவது வேலைக்கு முயற்சித்தால் என்ன? தீர்மான மாக எதுவுமே செய்யாமல் குழம்புவதிலும், ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பது எவ்வளவு நல்லது'

அவளது நினைவுகள் கலையும் வண்ணம் அவளது காலடியில் அந்த மேர்ஸிடஸ் பென்ஸ் கார் பாய்ந்துவந்து திடீரெனப் பிரேக்போட்டு நின்றது.

தருமுதான் காரைச் செழுத்திவந்தான்.

''ன்ன இந்த உலகத்தையே மறந்த யோசனை. பஸ் வரேல்லையா? வீட்டதானே? ஏறுங்க மகேஸ் போகலாம்''

அவன் முன் சீற்றில் இருந்து இறங்கி வந்து, மிகுந்த மரியாதையுடன் காரின் பின் கதவைத் தானாகவே திறந்து விட்டான்.

இவளுக்கு என்ன செய்வதென்று ஒரு கணம் தோன்றவில்லை. தயங்கினாள். பின்பு தயக்கம் நீங்கியவளாய், ஒரு மரியாதை கருதி அவனது அழைப்பை ஏற்று, காரின் பின் சீற்றில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அவன் காரை ஸ்ராட் செய்ததும், திரும்பிப் பார்த்து, 'வசதியாக இருக்கா...' என்று கேட்டான்.

தனது ஆமோதிப்பை தலையசைப்பின் மூலம் தெரிவித்துக் கொண்டாள்.

கார் செருக்கன் வீதியால் திரும்பியது. கொன்வென்ட்டை அண்மித்ததும், ''இதுதானே உங்கட ஸ்கூல்'' என்று கேட்டான்.

இவள் குரலடைத்துப்போனவளாய் மீண்டும் தலையசைத்தாள்.

செருக்கன் சந்தி வரைக்கும் அவர்கள் பேசாமல் மௌனமாக வந்தார்கள்.

'ஸ்ரட்புல்' சென்றரைக் கார் அண்மித்ததும் ஏனோ இவன் எட்டிப் பார்த்தாள். இளமையும் வீரியமும் மிளிர ஜேர்ஸி நாம்பன் ஒன்று நின்றது. அடுத்து சற்றுக் கிழடு தட்டிப் போன சிந்தி நாம்பன்.

செல்வம் நேற்றுக் கொண்டு வந்த ஃபிரிசியன் பசுவுடன் எது காதல் செய்திருக்கும். நிச்சயமாக ஜேர்ஸிதான் என்று அவளது மனதுக்குப் பட்டது.

மனசு இப்படி நிதானப்படாமல் சிந்திப்பதெல்லாம் இப்பொழுது இயல்பாகிப் போனது அவளுக்குக் கூச்சமாயிருந்தது. சற்று வியப்பாயுமிருந்தது.

''உங்க மாடுகளுக்கு இந்த ஸ்ரட் புல்ஸா... இன்சிமினேசன் சென்ரர் சீமனா பயன்படுத்திறது...?''

தருமு கேட்டதற்கு 'இரண் டும்தான்' என்று பதில் தந்தாள்.

அவளுக்கு அந்தக் கேள்வி யும் பதிலும் அதிக கூச்சத்தைத் தந்திருக்க வேண்டும். முகஞ் சிவக்க, உதடுகளைப் பற்களால் அழுத்தி, அழுத்திக் கடித்துப் பெரிதும் அவஸ்தைப் பட்டுக் கொண்டாள்.

அவளுச்கு அப்பொழுது திடீ ரெனச் செல்வம் தருமுபற்றிச் சொன்னவை ஞாபகம் வந்தது. 'ஆளைப் பார்த்தால் மன்மதன் மாதிரித்தான் இருக்கிறான்'

தருமுவை அவள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏறிட்டுப் பார்த்ததில்லை. இப்பொழுது அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. சீற்றின் இடப் பக்க ஓரத்திற்கு நகர்ந்து, அவனை வசதியான கோணத்தி லிருந்து பார்த்தாள்.

'செல்வம் ஒன்றும் மிகைப் படுத்தவில்லை. அந்த அழகிய நெற்றியில் சரிந்து கிடக்கும் சுருட்டைத் தலைமுடி. கரு கரு என அழகாக றிம் செய்த அந்த மீசை, திரட்சி பெற்ற சற்றுக் கருமையான உதடுகள், அடிக் கடி சிகரட் பிடித்ததினாலிருக் குமோ? அவனது அகன்ற மார்பு, நீண்ட கைகள், காரின் ஸ்ரெய ரிங்கைப் பிடித்திருக்கும் லாகவம்?

அவனை எழுப்பி நிற்கவைத் துப் பார்க்க வேண்டும் போலி ருந்தது அவளுக்கு. ஸ்ரட் சென் ரரில் கண்ட அந்த இளமை திமிர்த்த ஜேர்ஸி நாம்பனின் நினைவு அப்பொழுது ஏனோ வந்தது. அடுத்த கணம் மனசுக்கு 'சீ இதென்ன' என்று இருந்தது.

'மனசு... மனசுதானே...... அதற்கு என்ன கடிவாளம் வேண் டியிருக்கிறது. அது கட்டறுந்து போகட்டுமே. உடல் மட்டும் அப்படி இப்படி ஆகாமல் இருந் தால் போதாதா?'

இவளது தவிப்பு முழுவதை யுமே காரின் முகப்புக் கண் ணாடியில் தருமு அவதானங் கொண்டான். அவனது கவனிப்பு இவளுக்குத் தெரியவில்லை. தனக்குத் தெரிந்தது போலவும் அவன் காட்டிக் கொள்ளவில்லை.

சிலுந்தாவடி வந்ததும் இவள்:

''நான் இறங்கிக் கொள் ளவா? யாரும் பார்த்தா பிழை யா நினைப்பினை...''

''இதிலை என்ன பிழை மகேஸ்! பஸ்ஸில்லாமல் நிண்ட இடத்திலை தந்த லிஃப்ற்ரைக் கூடப் பிழையாக்கதைக்கேலுமா? சரி சரி உங்க விருப்பம்''

அவன் இறங்கி வந்து கத வைத் திறந்து விட்டான்.

இவள் அவனை நிமிர்ந்து பார்த்து நன்றி சொன்னாள். அதே சமயம் அவனது ஆகிரு தியை நன்றாகப் பார்க்கவும் செய்தாள். அவனுக்கு எந்தப் பெண்ணுடனும், எத்தனை பெண்களுடனும் சேரத் தகுதி இருப்பது போல இவளுக்குத் தோன்றியது.

அடுத்த கணமே இதென்ன பைத்தியக்காரத்தனமான சேர் டிஃபிக்கட் என நினைத்துக் கொள்ளவும் செய்தாள்.

''கவனம் பார்த்துப் போம் மகேஸ்'' என்று கூறிய தருமு, அவள் போவதையே பார்த்தபடி காரை ஸ்ராட் செய்தான்.

இவள் வீடுபோய்ச் சேர்ந்து சோர்வுடன் கதிரையில் உட் கார்ந்த பொழுது, உள்ளேவந்த செல்வம் சற்றுக் கோபமாகவே உரத்த குரலில் இவளைக் கேட்டான்:

''அந்த 'ஸ்ரட்புல்' லின்ரை காரிலை ஏன் வந்தனி. உனக்கு வெக்கமாயில்லை''

'யாரது ஸ்ரட்புல்' இவள் ஒரு கணம் திகைத்துப்போனாள்.

''யார் சொன்னது?''

'மன்மதன் என்ற வாயால் தருமுவை 'ஸ்ரட்புல்' என்கிறான். இதுவும் ஒரு வகையிலை பொருத்தமாய்த்தான் இருக்குது'

அவளது நினைவுகள்.

செல்வத்தின் குரலைக் கேட்டதும், அம்மா மாட்டுக் கொட்டில் பக்கம் இருந்து வந்து கொண்டிருந்தாள்.

அம்மாவை எதிர்கொள்ளத் துணிவு இல்லாதவனாய் இவன் வெளியே போனான்.

●

## 7

**அ**ன்று சித்திரா பௌர்ணமி. பட்டவேம்பு வைரவர் கோயிலில் பெரிய மடை. ஊரே கோயிலில் திரண்டிருந்தது. செல்வம் மட்டும் வீட்டு விறாந்தையில் கிடந்த ஸோபாவில் படுத்துக் கிடந்தான். கோயிலுக்குப் போனவர்கள் வருவதற்கு இரவு பத்துமணியாகலாம்.

ஏதேதோ நினைவுகள் அவனை ஆக்கிரமித்தன.

'அக்கா தருமுவின் காரில் வந்தது தற்செயல் நிகழ்ச்சியா? அல்லது அவனது கவர்ச்சி அக்காவையும் தொட்டுவிட்டதா......? வயசு வந்த பெண் உணர்வுகள் மட்டுப்படாமல் போனது அவளது குறையா? ஐயா ஒரு பிறத்தியான் மனோபாவத்துடன் நடந்து கொள்வது எதனால்? எல்லாமே என் பொறுப்புத்தானா? பண்ணை பயன் தருமென்ற நம்பிக்கை இல்லாமலே போய்விட்டதே. மாடுகள் என்ன மாதிரிக் கொட்டிண்டு போய் விட்டன. கால்விலை அரை விலைக்கு அவற்றை விற்று ஈட்டுக் கடனை அடைக்க முடியுமா? வரதா... அவள் பற்றிய நினைவுகள், நினைவுகளாக மட்டும் தங்கிவிட வேண்டியது தானா?'

தன்னை மறந்த சிந்தனையில் கிடந்தவன் சற்று அயர்ந்து தூங்கிவிட்டான்.

குளிர்ந்த ஸ்பரிசம் அவனை விழிப்புக் கொள்ள வைத்தது.

''செல்வம்......!'' என்ற அழைப்பு அவனது காதைக் கடித்தது.

வரதா மிக மிக நெருக்கமாக அவனுக்குப் பக்கத்தில் குத்துக் காலில் இருந்தாள்.

''கோயிலுக்குப் போகேல்லையா?''

''இல்லை''

''நான் இருப்பது...''

''தெரியும். அதுதான் வந்தனான்!''

''வந்ததுசரி, என்ன விசயம் சொல்லு''

''எனக்கு உங்க முடிவு தெரிய வேணும்''

''அவசரமா? அக்கா இருக்கேக்கை?''

''ஆனா, வீட்டிலை அவசரப் படுகினை''

''நல்ல மாப்பிளையா வந்தாச் சரியெண்டு சொல்லன்''

அவள் எழுந்து நின்றபடி, அவனது மார்பில் படபடவென்று குத்தினாள். குத்திய வேகத்திலேயே சுருண்டு உட்கார்த்து விசும்பத் தொடங்கினாள்.

அவனால் அதைத் தாளமுடியவில்லை: அன்புடன் அவளது கூந்தலை வருடியபடி;

''மாடுகளை வித்துக் கடனை அரைவாசியாவது அடைச்சுப் போட்டு, ஒரு உத்தியோகம் கிடைச்ச பிறகுதான் எல்லாம். அக்காவுக்கும் ஏதாவது நடக்க வேணும். ஒரு இரண்டு வருஷமாவது நீ பொறுமையா இருக்க வேணும் வரதா''

''இந்த மாடுகள் வந்துதான் எல்லாமே சீரழிஞ்சு போச்சு... உங்கடை கோலத்தைக் கண்ணாலை பார்க்கேலாது. வெய்யில் குளித்து ரோமக்கட்டெல்லாம் புலுண்டிப் போயிட்டுது. படிச்ச படிப்புக்கு இப்படி ஒரு அலைச்சல் அலைய வேணுமா?''

'படிப்புச்சரி, வேலை கிடைக்கேல்லையே வரதா! ஏதோ நாலு பேர் மதிச்சு நடக்க, கையிலை நாலு காசு கிடைக்குமெண்டு தானே இந்த முயற்சி. எல்லாம் வீணாய்ப் போச்சு. மாமா கூட இது வேண்டாமெண்டு தடுத்தார். தங்கச்சி பிள்ளை எண்டு எனக்கொரு வழி காட்டியிருக்கலாம். என்ரை வரதாக் குஞ்சு இங்க வாறதே அவருக்கு விருப்பமில்லையாமே... உனக்குத் தெரியுமா?''

அவள் அவனது உதடுகளைப் பேசவிடாமல் தனது மிருதுவான கைவிரல்களால் பொத்தினாள்.

''அப்பா, நேரம் ஒருமாதிரி மருமகன் உத்தியோகம் ஏதுமில்லாமல் மாட்டுக்குப் பின்னாலை சாணி பொறுக்கிறதுதான் அவருக்குப் பிடிக்கேல்லை''

''அவனரச் சாட்டி நீ என்ரை முயற்சியைக் கொச்சைப் படுத்திறை''

''இல்லைச் செல்வம்! இந்த மாட்டுப் பண்ணையெல்லாம் வேண்டாம். பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்சிக்கு செலெக்ட் பண்ணுகினை...... பாத்துப் போடுங்க''

அவள் எழுந்ததும் இவனும் எழுந்து கொண்டான்.

அவனது தோளின் உயரத்திற்குக் கூட அவள் வரவில்லை.

திடீரென அவள் எதிர்பாராத வேளை அவளை அணைத்து— ஒரு சிறு குழந்தையைத் தூக்குவது போலத் தூக்கி அவள் உதடுகளில் ஆழமாக இவன் முத்தமிட்டான்.

சிறிது பதட்டத்துடனும், கூச்சத்துடனும், ''இதென்ன ரௌடித்தனம்'' என்று செல்லமாகச் சிணுங்கியவள், அவனது பிடியிலிருந்து விடுபட்டு, விலகிப் போனாள்.

'இந்தப் பெட்டை ஏமாறாமல் பார்த்துக்கொள்ள வேணும்' என அவன் அப்பொழுது நினைத்துக் கொண்டான்.

●

## 8

தருமு தனது தொழிலையே மறந்தவனாய் மகேஸ்வரியின் பின்னால் சுற்றினான். மகேஸ்வரியின் மீது அவனுக்கு அப்படி ஒன்றும் காதல் இல்லை.

அவனது வாழ்க்கையில் பல பெண்களுடைய உறவும் தொடர்பும் அவனுக்கு இருந்தது. அவர்கள் பல தரத்தினர்.

கிரான்பாஸ் றோட்டில் சுலைமான்ஸுக்கு அருகில் ஒரு அழகான சிங்களப் பெண்ணோடு கூட அவன் உறவு கொண்டிருந்தான். அவளை நினைக்கும் தோறும் கருஞ்சிகப்பு அராபியக் குதிரையின் நினைவுதான் அவனுக்கு வரும். கறுப்பிலும் ஒரு அழகு இருக்குமென்றால், அவன் அப்படி ஒரு அழகி.

அந்த உறவு விட்டுப்போன தும் மட்டக்களப்பில் தனியார் மருத்துவ மனையொன்றில் ஒரு பெண் ஆர். எம். பியுடன் சிநேகம் ஏற்பட்டது. அவளுக்குச் சேவகம் செய்த தாதியைக்கூட இவன் விட்டு வைக்கவில்லை.

செங்கலடியில், அவனது மில்லில் வேலை செய்யும் லீலாவதி என்ற பெண்ணிடமும் அவசரம் என்றால் மட்டும் போவான்.

மகேஸ்வரி ஈட்டுப் பணம் கேட்டு வந்த அன்றே இவனது கண் அவளில் விழுந்துவிட்டது.

குடும்பப் பெண், மிகவும் கண்ணியமாக நடந்து அவளைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

செபஸ்தியார் கோயிலடியில் தனது காரில் அவளை ஏற்றிக் கொண்டதெல்லாம் தற்செயல் நிகழ்ச்சியல்ல, அவன் திட்டமிட்டு முன்யோசனையுடன் செய்து கொண்டதுதான்.

அன்றைய சந்திப்பு, தன்பால் அவள் இலகுவாக ஈர்க்கப்பட்டு விடுவாள் என்பதை நன்றாகவே அவனுக்குணர்த்தியது.

அந்தப் புரிதல் அவனை அவள்பால் மேலும் நெருக்கம் கொள்ள வைத்தது.

அவளுக்கு அவனிடம் பால் உணர்வின் ஈர்ப்பு இருந்தது. முதிர்ச்சியடைந்த பெண்ணாதலால் அதனை அவள் நிதானமாக வெளிப்படுத்துவதாகவே அவனுக்குத் தோன்றியது. முப்பது வயதிலும் திருமணமாகாத நிலை. அவளது அடக்கப்பட்ட பாலுணர்வின் இனிய விகசிப்பை இவனது அனுபவப்பட்ட ஆண் மனம் புரிந்து கொண்டது. அந்த உணர்வை அவள் காதல் என்ற போர்வை போர்த்துவதாகவே இவனுக்குப் பட்டது. இவனது இயல்புகளுக்கு மாறாக, அந்தப் பெண்ணை இவனும் காதலிப்பதாகவே பாவனை பண்ணினான்.

இன்று அவளது பிறந்த நாளென்பதால் பொய் சொல்லிவிட்டு யாழ்ப்பாணம் புறப்பட்டிருக்கிறாள். இவன் அவளை சுபாஸ் கபேக்கு முன்னால் சந்திப்பதாக ஏற்பாடு.

சுபாஸின் முன்னால் காரைப் ,பார்க்' பண்ணிவிட்டு நிமிர்ந்த பொழுது அவள் இவனை நோக்கி வருவது தெரிந்தது, அவளது கண்களிலும் உதட்டிலும் இருந்த சிரிப்பு இவனைக் கிறுக்கம் கொள்ள வைத்தது.

'இது... இது அப்பட்டமான பால் உணர்வு மட்டுமா? அவளது தீராத காதலை உணர்த்துவதாகவும் இருக்கிறதே!'

ஆச்சரியப்பட்டவனை அவளது பேச்சு நிதானப்படுத்தியது.

''முதலில் இனிப்பாக ஏதாவது சாப்பிடுவம்''

''இவற்றைவிடவா?'' என்று அவளது உதடுகளை மெதுவாக விரல்களால் வருடினான்.

''என்ன இது நடுரோட்டிலை''

இருவரும் சுபாஸில் நுழைந்து, வசதியாக இடம் பார்த்து உட்கார்ந்து கொண்டார்கள். எயர் கொண்டிசன் இதமாக இருந்தது.

அவள் ஆஸ்கிரீமுக்குத்தான் ஓடர் கொடுத்தாள்.

''ஏதாவது ஹொட்டாக''

''இல்லை...... இன்று இது தான், எனக்காக ...'' என்று கனிவாக அவனைப் பார்த்தாள்.

ஐஸ்கிறீம் சாப்பிட்டு வெளியே வந்ததும் இருவரும் பீடா போட்டுக் கொண்டார்கள். அவன் ஒரு பாக்கெட் 'பிறிஸ்ரல்' வாங்கிக் கொண்டான்.

காரில் ஏறியதும் ''எங்க போவம்'' என்று அவள் கேட்டாள்.

உண்மையில் அவனுக்கு எங்கு போவது என்ற உத்தேசம் ஏதும் இல்லை. அவளோடு ஊர் சுற்றினால் போதுமென்றிருந்தது. அவளை ஏதாவது தனியறைக்கு அழைத்துச் செல்வதில் அவனுக்கு ஆர்வமிருந்த பொழுதிலும், அவளது மனோநிலையை அனுசரித்து, நல்ல பிள்ளையாகவே நடந்து கொள்ள விரும்பினான். கையில் விழுந்த கனி நழுவிவிட முடியுமா என்ன? அப்படி ஒன்றும் ஆகாது என்பது அவனது அனுமானம்.

''கோயிலுக்கு... நல்லூருக்கு முதல்லை போவம்''

''சரி.....'' என்று காரை ஸ்ராட் செய்தான். அவனது கரங்களைப் பற்றியபடி அவனோடு இணைந்து நெருக்கமாகவே இவள் உட்கார்ந்து கொண்டாள்.

கோயில் கலகலப்பாக இருந்தது. பூசை நேரம். கால் அலம்பிய பின் இருவரும் உள்ளே சென்று, உள்வீதியைச் சுற்றி வந்தார்கள். அவள் மட்டும் முத்துக்குமாரசாமியின் சந்நிதியில் மீளவும் போய் நின்று கொண்டாள்.

இவனுக்கு அலுப்பாக இருந்தது. அதே சமயம் அவளது நம்பிக்கைகள் அவனுக்கு பயமூட்டுவதாகவும் இருந்தது.

''என்ன வேர் கொண்டாச்சா...?'' அவளை நெருங்கி மொதுவாகக் கேட்டான்.

விழிகளை அலர்த்தி' அவனை நிமிர்ந்து பார்த்தவள், 'முத்துக்குமரன் விடமாட்டான். கைவிடமாட்டான்...'' என்று ஏதோ பிதற்றியபடி அவனது கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள். குமரனுக்கு அர்ச்சனை செய்த விபூதியையும் சந்தனத்தையும் அவனது நெற்றியில் இட்டுவிட்டுத் தானும் பூசிக் கொண்டாள்.

இந்த அனுபவம் அவனுக்கு புதியது. படுக்கை அறையின் புழுக்கம் — கலவிக்குப் பின்னால் திகையும் அலுப்பு. வேர்வையின் நாற்றம், மதுவாடை, சிகரட் புகையின் நெடி இவைதான் அவனுக்குப் பழக்கப்பட்டவை. அவளுடனான இந்த அனுபவம் அவனைத் திகைக்க வைப்பதாய் இருந்தது.

''கீரிமலைக்குப் போவமா'' அவள்தான் கேட்டாள்.

''உன்ரை விருப்பம்''

மருதனாமடத்தை அவர்கள் அண்மித்தபோது இராமநாதன் கல்லூரி இடைவேளை. மாணவிகள் மதிய உணவுக்கு வெளியே வந்து கொண்டிருந்தார்கள். வெண்புறாவின் படபடப்பை அவர்களில் கண்ட அவன் வேட்கை ததும்ப வெறித்து வெறித்துப் பார்த்தான்.

அதனை அவதானங் கொண்ட அவள்:

''பெட்டைப் பொறுக்கி...... பெட்டைப் பொறுக்கி...'' என அவனது காதில் மட்டும் விழுமாறு செல்லமாகச் சிணுங்கினாள்.

கள்ளப்பட்ட அவன், 'அழகு ஆராதிப்பதற்காம்: உனக்குத் தெரியாது'' என்று ஏதேதோ பசப்பியவாறு, அவளது நெற்றியில் செல்லமாக முத்தமிடவும் செய்தான்.

கார் நிதானமாக கீரிமலை நோக்கி முன்னேறியது.

'இந்த நிதானம் இவனுக்கு, இவனுக்கு ஏன் வாழ்க்கையில் வரமாட்டேன் என்கிறது. எல்லாம் வரும். இனிமேல் வரும். குடும்பம்; வாழ்க்கை என்று வந்தால் எல்லாம் தானாக வரத் தானே வேணும்...'

அவள் மனசைத் தேற்றிக் கொண்டாள்.

●

## 9

மகேஸ்வரி வீட்டுக்கு வந்த பொழுது, இரவு ஏழுமணிக்கு மேலாகிவிட்டது. மிகுந்த கலக்கத்துடனேயே அவள் வீட்டினுள் காலடி எடுத்து வைத்தாள்.

''எங்க மகேஸ் போயிட்டு வாறை?''

''பள்ளிக்கூடத்துக்குத்தான். பஸ் கிடைக்கேல்லை, அதுதான்''

''ஏன் தருமன் கார் கொண்டு வந்திருப்பானே...?''

''என்ன விசர்க் கதை''

''எதடிவிசர். அமர் பிடிச்ச... இதென்ன அலைச்சலடி! மானம் போறமாதிரி...''

அம்மா அக்காவின் தலையைப் பிடித்து இழுத்துச் சுவரோடு மோதினாள்.

அக்கா தலையைத் தாங்கிப் பிடித்தபடி அப்படியே உட்கார்ந்து கொண்டாள். புருவம் வெடித்து இரத்தம் வடிந்தது.

சின்னவன் ரகுவால் தாள முடியவில்லை. அக்காவைக் கட்டிப்பிடித்தபடி கதறத் தொடங்கிவிட்டான்.

அம்மாவாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தனது தலையை அவளும் சுவருடன் மோதிக் கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த செல்வம் அக்காவைப் பார்த்துக் கேட்டான்:

''அந்தப் பொம்பிளைப் பொறுக்கி உன்னை ஏமாத்தினா என்ன செய்வை அக்கா?''

''பிள்ளையும் வயிறுமாத் தான் இந்தத் தேவடியாள் வந்து நிக்கப்போறாள்''

''சத்தம் போடாதையணை. என்று தாயை அதட்டிய செல்வம், அக்காவின் தலையை நிமிர்த்தினான். அதில், அந்த முகத்தில் தெரிந்த உணர்ச்சி இவனை ஒடுங்கி உறைந்துபோக வைத்தது.

உதடுகள் துடிக்க, அவள் இவனைப் பார்த்தபடியே இருந்தாள். நிலைகுத்திய அந்தப் பார்வை இவனை நடுங்க வைத்திருக்க வேண்டும். கண்கலங்கிய நிலையில் அவளைப் பார்த்துக் கேட்டான்:

''அக்கா...! என்ன... என்ன பேசக்கா. மனசில கிடக்கிறதைக் கொட்டிப் பேசக்கா...''

அக்கா எதுவும் பேசாமல் எழுந்து தனது அறையுள் சென்று கதவை அடித்துச் சாத்திக் கொண்டாள்.

அவன் துயரம் பொங்க அம்மாவைப் பார்த்தான்.

அம்மா பைத்தியம் பிடித்தவள் போல தலை தலையென்று அடித்துக் கொண்டு ஏதேதோ புலம்பிக் கொண்டிருந்தாள்.

அவள் கட்டிக் காத்த செல்வம், பரம்பரைப் பெருமை, தாவாடிக்காரர் எனும் உயர் சாதி அந்தஸ்து, கௌரவம், அனைத்துமே கொட்டிச் சிந்திய தான அவலம் அவளுக்கு.

அந்தத் தாய் தனது துன்பத்தை, துயரத்தை அழுது

தானே தீர்த்துக் கொள்ள முடியும்.

செல்வத்திற்கு என்ன செய்வதென்று தெரியாத ஒரு நிலை. அந்தச் சூழலில் இருந்து விடுபடும் உணர்வுடன் மல்லிகைப் பந்தலை நோக்கி நடந்தான். பந்தலின் கீழ் இருந்த கதிரையில் உட்கார்ந்தவனுக்கு எல்லாமே அர்த்தம் இழந்து சூனியமாக இருந்தது.

'எதிலை பிழை? பொறுப்பு எதுவுமே இல்லாத ஐயாவிலா, எனது கையாலாகாத்தனத்திலா, இந்த அமைப்பு, இதன் சதியா? குறையாத கல்விச் செல்வம் மட்டும் கிடைத்தது அதுவும் எவ்வளவு ஒறுப்புக்களுடனும் சிரமங்களுடனும், அக்கா மட்டும் படிக்காமல் இருந்திருந்தால் நான் படித்திருக்க முடியுமா? அவள் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டாள் எனது படிப்பு விஷயத்தில். தனது உழைப்பில் தனக்கென்று ஏதாவது மீதப் படுத்தியிருப்பாளா? எங்களுடன் பிறந்து என்ன சுகத்தைக் கண்டு விட்டாள். தன்னை எல்லா நிலையிலும் ஒடுக்கி ஒடுக்கிப் பழகிக்கொண்டவள். தருமுவின் தொடர்புகளால் தன்னை அழித்துக் கொள்ளப் போகிறாளா? ஒரு வேளை அவளது சௌந்தரியமும் இதமும் தருமுவைப் புனிதமாக்குமா?'

அவனது மனது மிகவும் துயருற்றது.

ஐயா செருமும் சத்தம் கேட்டது. இவன் எழுந்து உள்ளே போனான்.

ஐயாவைப் பார்த்ததும் அம்மா பெருங் குரலில் அழத் தொடங்கிவிட்டாள்.

விஷயத்தைக் கேட்டதும் ஐயா அப்படியொன்றும் ஆடிப் போய்விடவில்லை.

''தருமன்தானே கேட்டுப் பாத்தாப் போச்சு... அவன் சிவலிங்கம் சுண்டி எடுத்த சாதிமான். அவள் பொடிச்சி, தருமன்ரை தாய் சிவக்கொழுந்தி தான் அப்படி இப்படி. இதையெல்லாம் இப்ப யார் பார்க்கினை''

''அந்தப் பொட்டைப் பொறுக்கி உங்க மகளைச் சீரும் சிறப்புமா வைச்சிருக்கப் போறானே....... அவனுக்கு காலுக்கை நாலு, தலைக்கை நாலு பொம்பிளை வேணும். இவள் என்ன பெரிய உசத்தியா. அவனுக்குப் பத்தோடை பதினொண்டு, அத்தோடை இதொண்டு அவ்வளவுதான்.

அம்மாவின் பிலாக்கணம் ஐயாவுக்கு எரிச்சலூட்டியிருக்க வேண்டும்.

''சரி சரி, எழும்பு, என்ன சாப்பாடு இருக்கு தட்டைப் போடு''

''இதென்ன கூத்திது...... இஞ்சை சாவீடு மாதிரி இருக்கேக்கை, சரி சரி...அடுப்படியிலை போய் நீயே கொட்டிக்க''

அவளது இளக்காரமும், அஃறிணை விழிப்பும் இப்படி எப்பொழுதாவது இருந்துவிட்டு வந்து விடுவதுண்டு.

ஐயா அப்பொழுதெல்லாம் அடிபட்ட நீர்ப்பாம்பு மாதிரி விலகிக் கொள்வார்.

அம்மா ரகுவைப் பார்த்தாள். அவன் நிலத்தில் சுருண்டு படுத்துத் தூங்கிவிட்டான்.

குழந்தையை வாரி எடுத்துக் கட்டிலில் போட்டவள், தானும் பக்கத்தில்படுத்துக்கொண்டாள்.

திடீரென்று ஏதோ ஒரு பயம் அவனைக் கௌவிக் கொண்டது.

'அக்கா அறையில் ஏதாவது வீம்பாகச் செய்து கொண்டால்?' அவனுக்கு நினைக்கவே பயமாக இருந்தது. தூக்கமில்லாமல் புரண்டு புரண்டு படுத்தவன், 'அப்படியொன்றும் நடக்காது' என்று மனதைத் தேற்றிக் கொண்டு கண்ணயர்ந்தது புலரியில்தான்.

●

## 10

அக்கா இப்பொழுதெல்லாம் யாருடனும் முகம் கொடுத்துக் கதைப்பதில்லை. அவள் சிரித்துப் பேசி எத்தனை நாட்களாகி விட்டன. நடைப்பிணமாக இயங்கும் அவள் தருமுவுடன் சுற்றுவதை மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. அது அவளால் முடியாமலே போய்விட்டது.

திடீரென ஒரு நாள், பாடசாலை முடிந்து வந்தவள் ''இந்தா உன்ரை காணியுறுதி'' என்று அம்மாவின் முகத்தைப் பார்த்து உறுதிக் கட்டுக்களை விட்டெறிந்தாள்.

'அக்காவின் கோபம் புரிந்து கொள்ளக் கூடியதுதான். விரும்பியோ விரும்பாமலோ தருமுவுடனான அவளது உறவுக்கு ஒரு வகையில் இந்தக் காணி உறுதியும் காரணம்தானே''

''என்ன இது, எப்படி... எப்படித் தருமன் காசு கட்டாமல் ஈட்டுறுதியைத் தந்தவன்?''

அம்மாவுக்குச் சந்தோஷம் தாள முடியவில்லை. தருமனிடம் அக்கா கொண்டுள்ள தொடர்புகள் எவ்வளவு தூரம் அம்மாவைப் பாதித்ததோ ... அதைவிட அவளது சீதனக் காணியின் ஈடு அவளை மிகவும் பாதித்தது.

ஈட்டுறுதியைக் கண்டதும் அவளுக்கு வாயெல்லாம் பல்லாகி விட்டது.

அம்மாவைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

இழத்தற்கரிய தனது செல்வ மகளை இழந்துதான் இதை அவள் பெற்றுக் கொண்டாள் என்பதை ஏனோ அந்தப் பேதை மனம் புரிந்து கொள்ளவில்லை.

முகம் கழுவி, கைகால் அலம்பி வந்த அக்கா, நீண்ட நேரம் சாமி அறையில் இருந்தாள். இரண்டு நீண்ட கடித உறைகளை முருகனின் பாதங்களில் வைத்து வணங்கிவிட்டு வெளியேவந்தவள்:

'செல்வம்!' என்று கூப்பிட்டாள்.

எத்தனை நாட்களுக்குப் பிறகு அக்கா கூப்பிடுகின்றாள்.

அவனுக்குக் கண்கள் கலங்கி விடுகின்றன.

கடித உறையில் இருந்த விண்ணப்பப் படிவங்களை எடுத்து அவன் முன் வைத்தாள்.

பட்டதாரிப் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு மனு அது. அவனால் நம்ப முடியவில்லை. அவனை அழுத்தும் தொல்லைகளால் அவன் இது பற்றிக் கவனம் கொள்ளவில்லை. அக்கா எதிலோ பார்த்து எழுதி, விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொண்டு வந்திருக்கின்றாள்.

நீர் மல்கும் கண்களால் அவளைப் பார்த்தான். அவள் உதடுகளில் நெகிழும் லேசான முறுவல்; ஒரு கணம்தான்; பின் முகம் உறைந்து இறுக்கங் கண்டது.

அவன் அக்காவின் கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டான்.

இவன் விண்ணப்பத்தில் கையெழுத்திட்டதும்—

''நீயே போஸ்ட் பண்ணு, பதிவுத் தபாலிலை அனுப்பு'' என்றவள் மற்ற உறையிலிருந்த வேறு கடிதமொன்றை எடுத்து இவனிடம் தந்தாள்.

அது அவளது வேலை மாற்றல் கடிதம். அவள் மாற்றம் பெற்று மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரிக்குப் போவதான கடிதம்.

''ஏன் இப்படி...'' என்று எதுவும் அவன் கேட்கவில்லை.

அடுத்த மாதம் முதலாந் திகதியிலிருந்து அவள் வேலை ஏற்க வேண்டுமென்று கடிதத்தில் இருந்தது.

''எல்லாம் தருமுவின் ஏற்பாடாக இருக்க வேணும். அக்காவும் இதற்கு இசைவு தந்திருக்கலாம். ஊருக்குள் நாலுபேர் நாலுவிதமாகக் கதைப்பார்களே என்ற கூச்சமாகக்கூட அவளுக்கு இருந்திருக்கும்!''

அக்கா, அம்மாவுக்கோ ஐயாவுக்கோ எதுவும் சொல்லவில்லை. அவர்களைப் பிரிவதில் கூட அவள் அதிகம் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. செல்வத்தையும், ரகுவையும் அவளால் எப்படி மறக்க முடியும்? அவளைப் பொறுத்தவரையில் அவளது கண்களின் மணி போன்றவர்கள் அல்லவா அவர்கள்.

தனது அறைக்குச் சென்றவள், திடீரென வெளியே வந்து இவனைப் பார்த்துச் சொன்னாள்:

''மாடுகளை இப்ப விக்கிறது நட்டம். எண்டாலும் பரவாயில்லை. வித்துப்போட்டு சில்லறைக் கடன் முழுவதையும் அடைச்சுப்போடு. ஏதாவது மிச்சம் வந்தா அம்மாவின்ரை கையிலை கொடு...''

''இவன் ரகு... ரகுவைத்தான் நல்ல கவனமாகப் படிப்பிச்சுப்போடு. படிப்புத்தான் எங்களுக்கு மிச்சம். வரதாப் பெட்டையைக் கண்டா நான் கேட்டதாகச் சொல்லு. அவளும் இப்ப இந்தப் பக்கம் வாறேல்லை. கெட்டுப்போனவளோடை என்ன பேச்செண்டு மாமா மறிச்சுப் போட்டார் போல. உத்தியோக மாப்பிளை எண்டு மாமாவுக்கு உன்னிலை இனி விருப்பம் வந்தாலும் வரும். பயிற்சி முடிஞ்சு ரீச்சிங் அப்பொயின்மென்ரை மட்டக்களப்பிலை எடன்...''

சிறிது தயங்கியவள் தொடர்ந்து சொன்னாள்:

''வேண்டாம். இந்தக் கேடு கெட்டவளுடைய சகவாசம் உனக்கு வேண்டாம். நீ உழைக்கிறவரைக்கும் அம்மாவுக்கு நான் ஏதாவது அனுப்புவன்...''

''அக்கா நீ நல்லா இருப்ப, தருமு உன்ரை நல்ல குணத்தைப் புரிஞ்சு நல்லா ஏன் நடக்க மாட்டுது?''

''அந்த நம்பிக்கைதான் என்னை நடைப்பிணமாக்காமல் வைத்திருக்குது. இந்த முடிவு நான் எடுத்ததுதான். சற்று உணர்ச்சி வசப்பட்டதாய்க் கூட இருக்கலாம். அந்த ஆள் ஒரு மாதிரி எண்டு தெரிஞ்சும் பைத்தியமாய் அதற்கு ஆள்பட்டிட்டன். உங்க அக்கா அப்படி ஒண்டும் கெட்டுப்போகேல்லை ஊரிலை கதைக்கிற மாதிரி. கழுத்திலை தாலி ஏறின பிறகுதான் எல்லாம்... அதுக்கு தருமுவும் ஒத்துக் கொண்டது. எங்கையாவது கோயிலிலை, அது முருகன் சந்நிதியாக இருந்தா எனக்குச் சந்தோஷம்...''

அக்கா உணர்ச்சி பொங்கப் பேசுவதை அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவனது மனசு அவளது நல்வாழ்விற்காகப் பிரார்த்தித்தது.

●

## 11

**அ**க்கா மட்டக்களப்புக்குச் சென்று இரண்டு மாதமாகி விட்டது. இரண்டு தினங்களுக்கு முன்னர் இரண்டாயிரம் ரூபாய்க்கான எம். ஓவும், ஒரு சிறு துண்டுக் கடிதமும் இவனுக்கு வந்தது.

'காசை மாற்றி அம்மாவிடம் கொடு. பட்டதாரிப் பயிற்சி நெறி எப்பொழுது? ஏதாவது அது பற்றிப் பதில் வந்ததா?' எனற விசாரிப்பு மட்டுமே கடிதத்தில் கண்டிருந்தது. அவளைப் பற்றி ஒரு வரிகூட இடம்பெறவில்லை.

''அவள் பாவம் ... காசு அனுப்ப வேண்டாம் எண்டு எழுது''

அம்மாதான் சொன்னாள்.

எல்லாமே ஒரு பேச்சுக்குத்தான் என அவன் புரிந்து கொண்டான்.

அக்காவின் காசிலதான் எதுவும் நடக்க வேண்டும் என்ற நிலை; அவனுக்குக் கவலை தருவதாக இருந்தது.

பசுமாடுகளை விற்பதற்கு சுந்தரத்தைத்தான் அவன் அணுகினான். 'நாலு பசுவும் கண்டு போட்டபின் விற்றால் என்ன?' என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது. இரண்டொரு மாதம் இடைவிட்டுப் பசுக்கள் கன்று போடக் கூடும். மற்ற மூன்று பசுக்களும் கண்டு பட்டிருந்தன.

ஐயா, ''கருவாய் ஜேர்ஸியை மட்டும் விற்கவேண்டாம். வீட்டுத் தேவைக்கு வேணும் தானே...'' என்றார்.

'இளம் பசு, அடக்கமானது, குழந்தை கூடப் பால்கறக்கலாம்' என்பது அவரது அபிப்பிராயம்.

அவரது அபிப்பிராயங்கள் கூட சில வேளைகளில் சரியாகவே அமைந்து விடுவது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

அக்காவைப் பற்றி முழுமையாக மறந்து போனவராய்த் தான் அவர் இருந்தார். அவரது மூத்தபிள்ளை ஒரு பெண் என்பது கூட அவருக்கு ஞாபகம் விட்டுப் போய்விட்டது.

அம்மாதான் அக்காவைப் பற்றி ஏதாவது 'பிசத்திக்' கொண்டிருந்தாள்.

இவனது மனம் அக்காவை ஜெபித்துக் கொள்ளாத வேளை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ரகு தனது இரண்டாம் வகுப்புப் புத்தகத்தில் அக்காவின் சிறிய படம் ஒன்றை ஒட்டி வைத்திருக்கின்றான். அந்தப் பிஞ்சு மனது அக்காவின் பிரிவைத் தாள முடியாது துயருறுவது இவனைப் பெரிதும் கலக்கமடையச் செய்தது.

வரதா, வீட்டுப்பக்கம் முன்பு அடிக்கடி வருவாள். இப்பொழுது வருவதைக் குறைத்துக் கொண்டு விட்டாள். இவனது பட்டதாரிப் பயிற்சி நெறி பற்றிய விபரம் அறிந்திருந்தும் அவள் இவனைச் சந்திப்பதையே தவிர்த்துக் கொள்வது ஏன்...? இவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

ரகுதான் ''வரதா மச்சாள் எப்ப றெயினிங் எண்டு கேட்டவ அண்ணை...'' என்றான்.

அதற்கு இவன், ''அவளை வந்து கேக்கச் சொல்லடா...'' என்று சிரித்தபடி பதில் தந்தான்.

ஆனால், வரதா மட்டும் கண்ணில் படுவதே இல்லை.

அன்று பிள்ளையார் சதுர்த்தி; அதுவும் ஆவணிச் சதுர்த்தி.

இலந்தை வனப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் வேறு நடைபெறுகிறது. இரண்டாம் திருவிழா. இவன் கோயில்பக்கம் போய் வருவோம் எனப் புறப்பட்டான்.

தாவாடித் தோட்டத்தைக் கடந்து, வடக்கு வயலுக்குள் இறங்கும் போது, முத்தையர் வளவுப் பனங்கூடலைக் கடந்து வரதா போய்க் கொண்டிருந்தாள்.

அவன் எட்டி நடந்தான், விதானையார் வீட்டடியில் அவளுக்குக் குரல் கொடுத்தான்.

''வரதா......!''

அவள் திரும்பிப்பார்த்தாள். கண்களில் நீர் முட்டிவிட்டது. உதடுகள் துடிக்க நின்றாள். இள நீலப்பட்டுப் புடவையில் அவள் அழகாக இருந்தாள்.

கால் நகர்த்தாமல் நிலம் பாவியவள், இவனைப் பார்ப்பதற்கே தயக்கம் கொண்டவளாய் இவனில் இருந்த பார்வையை வேறு பக்கம் திருப்பி நடக்க ஆரம்பித்தாள்.

''என்ன வரதா இது...... கொம்பு முளைச்ச குணமா... உனக்கு உன்ரை அப்பற்றை புத்தி வந்திட்டுதா?...''

''அம்மாதான் உங்கவீட்டை போக வேண்டாமெண்டவ. ஓடுகாலி வீட்டுப் பக்கம் போனா உன்ரை காலை அடிச்ச முறிப்பன் எண்டவ...''

'ஆர் ஓடுகாலி, அக்காவா? இவள் என்ன சொல்லுகிறாள்'

அவனது மனம் மிகுந்த துயரங் கொண்டது.

''அதற்கும் இதற்கும் என்ன வரதா? அவ முறைப்படி தருமு வைத் தாலி கட்டித்தானே சடங்கு செய்தவ''

''தெரியுமே'' அவள் ஏளனமாகச் சிரித்தாள்.

அவனுக்குப் புண்ணுக்குப் புனுகு தடவியது போல் பற்றிக் கொண்டு வந்தது. என்ன ஏது என்று கேட்காமலேயே அவளது கன்னத்தில் பளீரென அறைந்தான்.

அவள் இதனை எதிர்பார்க்கவில்லை. கண் கலங்க இவனைப் பார்த்தாள். கோயிலுக்குப் போகாமல் அவள் திடீரெனத் திரும்பி நடந்தாள். அது அவனுக்குச் சங்கடமாய்ப் போய் விட்டது. அவளைத் தடுப்பதற்கோ, கோயிலுக்கு அழைத்துச் செல்வதற்கோ அவனால் முடியவில்லை.

சிறிது தூரம் போனவள், திரும்பி நின்று, ''உங்கடை சங்காந்தமே இனி வேண்டாம்...'' என்று விசும்பியதை இவனால் தாள முடியவில்லை.

'இனி என்ன கோயில்...?'

அவளைப் போல இவனால் உடனே திரும்ப முடியவில்லை. கோயில் பக்கம்போய்விட்டு, ஏழு மணியளவில் வீடு வந்தான்.

அம்மா திண்ணையில் முடங்கிக் கிடந்தாள். இவனைக் கண்டதும் எழுந்தவள், வரதா பற்றித்தான் ஏதோ சொல்லப் போகிறாள் என்று நினைத்தான். ஆனால் அவள் கூறியது அவனையும் வரதாவையும் நிரந்தரமாகவே பிரிக்கும் செய்தியாக இருந்தது.

''உன்ரை மச்சாள் வரதாவுக்கு வண்ணார்பண்ணையிலை யாரோ பொடியனைப் பாத்திருக்காம்... எஞ்சினியராம்... எல்லாம் முற்றாய்ப் போச்சாம, ஆவணி பத்திலை பதிவாம்... தையோடை கலியாணமாம். இவர் அண்ணர் பெட்டைக்கு வீடுவளவும், மூண்டு லட்சம் சீதனமும், மாப்பிள்ளைக்கு இரண்டு லட்சம் டொனேசனும் கொடுக்கிறாராம்''

அவனால் எதை நம்புவது எதை விடுவதென்று தெரியவில்லை.

'எல்லாமே மாயத்தோற்றம் தானா? எஞ்சினியர் என்ற அந்தஸ்தில் இவள், வரதா மயங்கி விட்டாளா? இளம் பெட்டை! பால் உணர்வின் ஆரம்ப விகசிப்பில் பழகியிருப்பாள். அதைப் போய்க் காதல் அது இதென்று தப்புக்கணக்குப் போட்டது என்னுடைய பிழையா?...'

'இல்லை... இருக்கவே இருக்காது. எவ்வளவு அன்பு பாராட்டிய ஜீவன் அவள். சற்று முன் கோயிலுக்குப் போகும் வழியில் என்னைக் கண்டதும் அவள் கண்களில் நீர் திரையிட்டது ஏன்? அதன் பின் நடந்தவையெல்லாம் உணர்ச்சிச் சுழிப்பின் வெளிப்பாடா? அல்லது வரதா மாறித்தான் போய்விட்டாளா?'

அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

அவனது உணர்வு நிலை சமன்பட்டதும் அவன் நினைத்துக் கொண்டான்:

'வரதாவின் கதி அவளது அப்பாவால் நிர்ணயம் செய்யப் பட்டு விட்டது. அவள் உண்மையில் சூழ்நிலையின் கைதி' அவளைக் கண்டு தனது முரட்டுத் தனத்துக்கொல்லாம் மன்னிப்பு உண்டா என்று கேட்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

''என்னடா நான் சொன்னது கேட்டதா? அந்தப் பெட்டை உன்ரை காலுக்கை சுற்றிச் சுற்றி வரையிக்கை நானும் ஏதோ அப்பிடி இப்பிடி எண்டு நினைச்சன். எல்லாமே பொய்யடா தம்பி, பொய்...''

''இல்லையம்மா, எல்லாம் மாமான்ரை வேலை. பாவம் வரதா. அவளாலை ஒண்டும் செய்ய முடியேல்லைப் போல''

''உவள் உன்ரை மாமியும் எஞ்சினியர் மாப்பிளை தான் வேணும் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறாளாம்''

''முடிக்கப் போறது மாமியா... இல்லை வரதாவா?'' நுனி நாக்கில் வந்த வார்த்தையை கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவன் நெருக்கமாயிருந்த எல்லாவற்றையுமே இழந்த உணர்வோடு அம்மாவையும் மல்லிகைப் பந்தலையும் மாறி மாறிப் பார்த்தான்.

அவனுக்கு விருப்பமான குண்டு மல்லிகையின் சுகந்தம் கூட ஏனோ அப்பொழுது அவனுக்கு எரிச்சலூட்டுவதாயிருந்தது.

●

## 12

பயிற்சி வகுப்புகள் கொழும்பில்தான் நடந்தன. ஆறு வார காலப் பயிற்சி, அனுலா மகா வித்தியாலயத்தில் நடந்தது. பயிற்சிக்காலம் அவனுக்கு மிகுந்த சலிப்பூட்டுவதாகவும் சுவையற்றதாயுமிருந்தது.

பயிற்சி முடிந்த கையுடன் அவனது நியமனக் கடிதம்

கிடைத்தது. வவுனியா மாவட்டம் சாஸ்திரி கூளாங்குளத்திலுள்ள ஒரு கலவன் பாடசாலை, அவளது கடமையை எதிர்பார்த்திருந்தது.

ஆசிரியத் தொழிலில் மிகுந்த நாட்டம் கொண்ட அவன், அதற்கே உரிய கனவுகளுடனும் நம்பிக்கைகளுடனும் பாடசாலைக்குப் போனான்.

நகரில் இருந்து சைக்கிளில் தான் பிரயாணம். 'அரை நேரப் பாடசாலை: காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகி இரண்டு மணிக்கு முடிவடையும் என நினைத்தான். இவன் ஏழு ஐம்பத்தைந்துக்கெல்லாம் பாடசாலையை அடைந்து விட்டான். பாடசாலைக் கேற் பூட்டிக் கிடந்தது. இவன் காத்திருந்தான். எட்டு முப்பதளவில் சற்று வயதான பெண் ஒருவர் வந்தார்.

''யாரைப் பார்க்கவேணும்''

''அதிபரை...!''

',அப்படியா! வாருங்கள்'' என்று கேற்றைத் திறந்தபடி அவர் உள்ளே செல்ல, அவரைத் தொடர்ந்து சைக்கிளை தள்ளியபடி இவனும் சென்றான்.

அவர் தன்னைத் திருமதி சிவப்பிரகாசம் என அறிமுகம் செய்து கொண்டார். உப அதிபர் என்பதையும் அவர் பேச்சில் இருந்து அறிந்து கொண்டான்.

ஒன்பது மணியளவில் அதிபரின் வழுக்கை தெரிந்தது. வந்த வேகத்தில் அவரே முதல் மணியை அடித்து, பிள்ளைகளை வகுப்பில் நிற்கவைத்து, தேவாரம் பாட வைத்தார்.

தேவாரம் முடிந்த பின்னர் தான் இவனை அவர் நிமிர்ந்து பார்த்தார்.

''தம்பி......''

''புதிய நியமனம்......''

இவனது நியமனக் கடிதங்களைப் பார்த்தவர் முகம் மலர;

''நல்லது... பட்டதாரி ஆசிரியர். கலைப்பட்டதாரி, உமக்கு நிரந்தரமா 'ரைம்ரேபிள்' போட்டுத்தாறன். இண்டைக்கு ஒ. எல்லுக்கு தமிழும், சமூகக் கல்வியும் படிப்பியுமன்''

இவன் ஒ எல் வகுப்புக்குப் போனான். வகுப்பில் மூன்று பிள்ளைகள் தான் இருந்தார்கள். இவனுக்கு ஏமாற்றமாய் இருந்தது.

''எங்கை மற்றப் பிள்ளைகள்?''

''அரிவு வெட்டு அதுதான் சேர்......''

பதில் கூட்டுப்பாடலாக வந்தது.

'விவசாயக் கிராமம், பிள்ளைகளது வரவு குறைவாக இருக்கலாம். ஆனால் அதற்காக இவ்வளவு குறைவாக எப்படி .?'

ஆச்சரியப்பட்ட அவன், தயக்கத்துடன் தனிப்பாடல் திரட்டில் ஒரு தாலாட்டுப் பாடலை எடுத்துச் சுவைபட விளக்கினான்.

பிள்ளைகள் அவனது கற்பித்தலில் ஈர்க்கப்பட்டதைப் புரிந்து கொண்டான்.

அவனது பாட நேரம் முடிவதற்கு முன்னதாகவே, குறுகிய நேர லீவுக்கான மணி அடித்தது. இவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. குழம்பினான்.

நேரசூசியில், குறுகிய நேர லீவு பதினொரு மணிக்கு என இருந்தது. ஆனால் பத்துமணிக்கு முன்னதாக மணியடித்து விட்டது.

அதிபரிடம் சென்று, பதவி ஏற்புக் கடிதத்தைத் தந்தவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் அருந்த வேண்டும் போலிருந்தது.

ஆசிரியர் அறைப்பக்கம் போனான். ஆசிரியர் அறையென்று ஏதுமில்லை. பாடசாலையின் தென் புறத்தில் ஒரு மேசையும், அதைச் சூழச் சில கதிரைகள் மட்டுமே இருந்தன. அங்கு, எல்லா ஆசிரியர்களும் சமா வைத்துக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக ஆசிரியைகளின் குரல் சற்று மிதப்பாக இருந்தது.

''சியாமளா ஏன் இண்டைக்கு வரேல்லை...?''

''அவவின்ரை கொழும்பு மாப்பிளை வந்திருக்கிறார்...... அதுதான்...'' ஸ்ரெலா ரீச்சரின் பதில்.

''ஆரது கொழும்பு மாப்பிளை...?''

''சிவகுமாரின்ரை தம்பி..... மனோகரன்தான்''

''என்ன அப்படி மோசமே''

''பொடியன் மாதத்துக்கு இரண்டு தரம் லீவிலை வருகுது. வந்தா அடுகிடை படுகிடைதான்.

இவன் தண்ணீர் குடித்து விட்டு வெளியே வந்தான்.

நாக்கில் நரம்பில்லாமல் வம்பு பேசும் சூழல் அவனைப் பெரிதும் தாக்கியது.

உறைந்து போனவனை அதிபர்தான் சுயதளத்திற்கு மீட்டு வந்தார்.

''ஆறாம் வகுப்பு ரீச்சர் வரையில்லை, ஒரு பாடம் எடுமன் தம்பி...!''

'சரி' என்று தலையசைத்தவன், ஆறாம் வகுப்பில் பாரதியாரின் சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா பாடலைக் கற்பித்தான்.

குழந்தைகள் அவனது கற்பித்தலில் கிறுங்கி, பூரித்துப் போயிருந்தனர்.

பாடம் முடிந்த கையுடன் ஒரு பெண் குழந்தை கேட்டாள்:

''உங்களுக்கு எங்க ரீச்சரைத் தெரியுமா சேர்...? அவவும் யாழ்ப்பாணந்தான்''

''ஆர் உங்க ரீச்சர்...?''

''சியாமளா ரீச்சர்...! அட இது கூடத் தெரியாதா...!''

அவனுக்குத் தெரியாதது அவளுக்குப் பெரு வியப்பாயிருந்தது.

அவளுக்குத் தெரிந்த எல்லாமே இவனுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது போலவும் இருந்தது.

அவள் தொடர்ந்து சொன்னாள்:

''எங்க ரீச்சர் நல்லாப் படிப்பிப்பா. அவ நல்ல வடிவு. அம்மன் மாதிரி...'' என்றாள்.

''அம்மன் எண்டா அட்டைக் கறுப்பா...?''

''சீ... போங்க சேர்...''— கலீர் எனச் சிரித்தவள், ''அவ நல்ல சிவப்பு. ரோஸாப்பூ மாதிரி...!''

''நான் எப்படி......?''

''நீங்களும் நல்லம் தான்...'' என்று கூறிய அவளது குரலையும் மீறி வகுப்பில் இரண்டாவது வரிசை வாங்கில் இருந்த பையனின் குரல் ஒலித்தது:

''நீங்க அச்சா, சேர்... நீங்க தமிழ் படிப்பியுங்க... மிஸ் கணக்குப் படிப்பிக்கட்டும்''

''உங்க ரீச்சர் எப்ப வருவா?'' எ

"நாளைக்கு வருவா. அவ லீவே போடமாட்டா. அவ பாவம். அவவின்ரை அவர் செத்துப்போனார்... ஆண்டுத்திவசம் அதுதான்......''

"அவர் செத்துப்போனாரா" அவன் பதறினான்.

"உங்களுக்கு இதுவும் தெரியாதா? ஆமிக்காரன் சுட்டுப் போட்டான்''

அந்தச் சிறுமி மீளவும் ஆச்சரியப்பட்டாள்.

'எங்கே, எதற்காக, எப்படிச் சுடுபட்டான்' இவன் கேட்க ஆதங்கப்பட்ட போதும் குழந்தைகளால் விளக்கம் தர முடியவில்லை.

''தின்னவேலியிலை தாளையடி ஒழுங்கையிலை, ஜூலை இருபத்திமூண்டு... ஆமீ செத்ததுக்கு... அடுத்த நாள் செத்தவர். வீடுபூந்த ஆமிக்காரங்கள் அவரைச் சுட்டுப் போட்டுப் போயிட்டாங்கள். ரீச்சர் தப்பினது அருந்தப்பு''

முதலில் உரத்துப் பேசிய பையனே இதனையும் சொன்னான்.

குழந்தைகள் துக்கத்தின் அழுத்தத்தால் அமைதியாக இருந்தார்கள். அவர்களது துயரத்தைப் பகிர்ந்து கொண்டவனாய் இவனும் உறைந்துபோய் மௌனித்து இருந்தான்.

'ஆசிரிய அறையில் நடந்த வம்பும் பேச்சிற்கும், இந்தக் குழந்தைகளின் வாயிலிருந்து வந்த சியாமளா ரீச்சர் பற்றிய மதிப்பீட்டிற்கும்எவ்வளவு முரண் முதிர்ச்சி அடைய அடைய மனம் சிலருக்குச் சாக்கடையாகப் போய் விடுமோ?'

அவன் நினைவுகளில் அமிழ்ந்து போனான்.

அந்த சியாமளா ரீச்சரை அவனுக்குப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

பாடசாலை விட்டதற்கான மணி அடித்ததும் இவன் ஆச்சரியம் தாளாமல் அதிபரைப் பார்த்தான்.

"தம்பி, சாஸ்திரி கூழாங்குளத்திற்கு ஒரு பஸ்தான் ஓடுது, ரவுனுக்குப் போற ரீச்சேர்ஸ் இருக்கினை. பஸ் வந்திட்டுது. அதுதான் இந்த பஸ்ஸை விட்டால் பிறகு மூண்டு மணிக்குத் தான் பஸ்''

ஆசிரியத் தொழிலின் ஆரம்ப நாளே அவனுக்கு அர்த்தமற்றதாகவும், ஏமாற்றம் தருவதாயுமிருந்தது.

'யார், யாரை நொந்து கொள்வது' என நினைத்தவனாய் சைக்கிளில் ஏறி அமர்ந்து பெடலை அழுத்தி மிதித்தான்.

சைக்கிள் வேகம் கொண்டது.

## 13

பாடசாலை முகவரிக்கு அந்த அழைப்பிதழ் வந்திருந்தது. பொங்கலை அடுத்து வரும் தை இரண்டாம் நாள் திருமணம்.

வரதா கைப்பட எழுதி அனுப்பிய அழைப்பிதழ். முத்து முத்தான எழுத்துக்கள். கண்களில் வைத்துக் கொள்ளலாம் போலிருந்தது.

'அவளது எழுத்துக்கள் மட்டுமா? அவளும் எவ்வளவு அழகும், சீர்மையும் வாய்ந்தவள். இந்த ஜென்மத்திற்கு அவள் இல்லை என்றாகி விட்டதே...! திரும்பத் திரும்ப அவளை நினைப்பதும் துயருறுவதும்தான் விதித்த விதியா...?'

அலையும் மனசை அவனால் தடம்போட முடியவில்லை.

ஆவணிச் சதுர்த்தி அன்று, இலந்தைவனம் பிள்ளையார் கோயிலுக்குப் போனபோது வழியில் நடந்த நிகழ்ச்சி அவனுக்கு அப்பொழுது மீளவும் ஞாபகம் வந்தது.

'அவளை அப்படி மிருகமாக மாறி அடித்திருக்க வேண்டாமே' என நினைத்துக் கொண்டான்.

அந்த நிகழ்ச்சியின் பின்னர் 'வரதாவைச் சந்திக்க வேண்டும், சந்தித்து மனசில் உள்ள தவிப்பை எல்லாம் கொட்டிக் கொட்டிப் பேச வேண்டும்' என்றிருந்தது. ஆனால், அந்த முயற்சி பலிதமடையாமல் போய் விட்டது.

'எல்லாம் மாமியின் கட்டுக் காவலாக இருக்கும்'

வரதா இல்லாத வாழ்க்கையை அவனால் கற்பனை பண்ணிப் பார்ப்பது சிரமமாக இருந்தது.

''யாருடைய வெடிங்காட்?''

சியாமளா ரீச்சர்தான் கேட்டபடி வந்தாள்.

இள நீல வண்ணச் சேலை, அதற்குப் மாச் பண்ணும் விதத்தில் ரெரீன் துணியில் சட்டை அணிந்து அழகாக இருந்தாள். வத வத என்று அவனது உயரத்திற்கு சமதையாக வளர்த்தி கொண்டிருந்தாள். நீண்ட சந்தனக் கழுத்து; ஆபரணம் ஏது மற்ற வெறுமையாக இருந்தது. பிருஷ்டம் வரை தழையும் கூந்தல். நெற்றி மட்டும் பாழ்பட்டுக் கிடந்தது.

அவளைப் பார்க்கும் போதெல்லாம் 'நெற்றியில் சின்னதா... ஒரு கறுப்புச் சாந்துப் பொட்டாவது வைக்கக்கூடாதா' என மனசு அடித்துக் கொள்ளும். ஆனாலும், கேட்கத் துணிவு கொள்ள மாட்டான்.

தன்னில் பிரியம் வைத்த, அல்லது அவன் பிரியம் கொண்ட எந்த ஜீவனுமே ஏதோ ஒரு வகையில் துன்பமுற்றுத் துயருறுவதாகவே அவனுக்குத் தோன்றியது.

'வரதா... அக்கா... இப்பொழுது இதோ இந்தச் சியாமளா... இவர்களது வாழ்க்கை எவ்வளவு கொட்டிச் சிந்தப்பட்டு... சேதாரமாகிவிட்டது'

''என்ன யோசனை? மச்சாளின்ரை கலியாணத்துக்குப் போக வேணும்தானே......'

இவன் பதிலேதும் தராமல் அவளை ஏறிட்டுப் பார்த்தபடி இருந்தான்.

அவள் கண்களை மலர்த்தி, சிறிது சிரித்தபடி கூறினாள்:

''ஒரு பெட்டை இல்லை எண்டால் இன்னொரு பெட்டை எண்டு இருக்கிற ஆம்பிளையளின்ரை மத்தியிலை நீங்க வித்தியாசம். கைமீறிப் போன விஷயங்களுக்கு இப்படி மனசு உடைய உணர்ச்சிவசப்படக் கூடாது.. ...''

''எல்லாம் உபதேசம் தான்; உங்களாலை சிவகுமாரை மறக்க முடியுதா...? எவ்வளவு நாட்களாகி விட்டன சிவகுமார் பிரிந்து. அந்தச் சோகம் மெல்லிய இழையாக உங்களைச் சூழ்ந்து திரையிட்டிருப்பதை இப்பொழுதும் என்னாலை பார்க்க முடிகிறதே''

அவள் அதனை அவசரமாக மறுத்தாள்.

''நோ... நோ... அப்படி இல்லை. அது வேறை இது வேறை இல்லையா? என்னதான் இருந்தாலும் சிலதுகளை மன

சிலை இருந்து துடைத்துவிட முடியுமா......?''

அவள் கூறியதை ஆமோதித்தவன், தொடர்ந்து சொன்னான்:

"'எனது கவலை எல்லாம் வரதாவை இழந்ததல்ல. பெண் ஓர் உடமைப் பொருளாக, தொழுவத்தில் நிற்கும் மாடு போல, திருமணம் என்ற பெயரில் விற்கப்படுவதும், வாங்கப்படுவதும் தான் எனக்கு அதிக துயரம் தருகிறது. திருமணம், உறவு என்பதெல்லாம் செக்ஸ்ஸை முதன்மைப்படுத்தி சோடி சேர்க்கிற விஷயம் மட்டுமா...? மனம் சம்பந்தப்பட்டது கூடத் தானே... இதையெல்லாம் இந்த மாமாவோ மாமியோ ஏன் தெரிந்து கொள்ளவில்லை....,"

''செல்வம் வாழ்க்கை அபபடியும் இப்படியும்தான்....... எல்லாமே தலை தடுமாறித்தான் இங்கு கிடக்கிறது. எனக்கு என்னவோ சிவ்குமாருடன்எல்லாமே முடிந்து விட்டது போல ஒரு களைப்பு. ஒரு நூறு வருஷம் வாழ்ந்த சலிப்பு ஏற்பட்டு விட்டது. இந்த நிலையிலும் வாழ்க்கையை நம்பிக்கையுடன் பார்க்கிற பழக்கம்தான் என்னை ஓரளவு இயக்கம் கொள்ள வைக்கிறது. உங்களைத் தேற்றிக் கொள்ளுங்க..... வாழ்க்கையை நம்பிக்கையுடன் பாருங்க. அப்பொழுது தான் உங்களாலை உடைந்து போகாமல் இருக்க முடியும்''

''நன்றி ரீச்சர்'' என்றவன் எழுந்து கொண்டான்.

பாடசாலை மணி அடித்தது, இருவரும் சேர்ந்து வெளியே வந்தார்கள்.

இப்பொழுதெல்லாம் இவன் பாடசாலை விட்டதும் சியாமளாவுடன் அவளது வீடுவரை நசைக்கிளைத் தள்ளியபடி நடந்தே வருகின்றான்.

இந்த இரண்டு மாதகாலப் பழக்கம் அவர்கள் இருவரையும் நெருங்கிவர உதவியிருக்கிறது. ஒருவர் மனசை ஒருவர் தொட்டுப் பார்க்கவும் சொந்தங் கொண்டாடவும் உதவியுள்ளது. இருவரது துயரமும் ஓரளவுக்கு ஒத்த தன்மையுடையதாக இருந்தமை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

சிவகுமாரனின் இழப்பு அவளால் மறக்க முடியாத ஒன்றாகி விட்டது. அதே போல வரதாவின் நினைவு தந்த அழுத்தம் இவனைப் பெரிதும் பாதிக்கவே செய்தது.

மனதில் கிடந்த அனைத்தையுமே இருவரும் பகிர்ந்து கொண்டார்கள். இருவருக்கும் மறைத்துக் கொள்ளத்தக்க விஷயமென்று ஏதும் இல்லாமல் போனது மிகவும் ஆச்சரியமாகவே இருந்தது.

வெறும் வாயை மெல்லும் சக ஆசிரியர்களையும் அவர்களிருவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

உயர்வான நட்பைப் பேணுவதற்கு ஒரு ஆண்தான் வேண்டுமென்பதில்லை. ஒரு பெண்ணாலும் முடியும் என்பதை அவன் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டான்.

சமவயது. மென்மையான உணர்வுகள். இலக்கியம், கலைகள், அரசியல் பற்றிய ஒருமித்த கருத்துக்களின் இசைவு. எல்லாமே அவர்களது நட்புக்கு உரமிட்டன.

இருவரும் பேசாமல் சிறுது தூரம் நடந்தார்கள்.

சியாமளா வீட்டை அண்மித்ததும் இவன் விடைபெற விரும்பியபோது:

''ஒரு நிமிஷம் உள்ளே வாருங்கள்...'' என்றாள்.

அவளது உறுதியான அழைப்பை அவனால் தட்ட முடியவில்லை.

சைக்கிளை 'ஸன்ஷேட்டின்' கீழாக நிறுத்திவிட்டு. அவளுடன் தொடர்ந்து இவனும் உள்ளே சென்றான்.

சிறிய வீடு அடக்கமாகவும் அழகாகவும் இருந்தது. முன்பு ஒருமுறை வந்திருந்த பொழுது இவ்வளவு நட்புடன் வரவில்லை.

குருத்துப்பச்சை நிறத் திரைச்சீலைகள் காற்றில் அசைந்தன. புதிதாக செற்றி வாங்கி இருந்தாள். முன்னர் வந்த போது இருக்கவில்லை. ஹோலின் கிழக்குச் சாய்வில் இருந்த கண்ணாடி அலுமாரி நிறைந்த புத்தகங்கள்.

யாழ்ப்பாணத்தை முழுமையாக மறந்தவளாகிவிட்டது இவனுக்கு வியப்பைத் தந்தது. உறவு என்று சொல்லிக் கொள்ள சிவகுமாரின் தம்பி மனோகரன் மட்டும் வந்து போகிறான்.

'தனது பிரியத்துக்குரிய சிவாவைப் பலிகொண்டுவிட்ட அந்த மண்ணை மிதிப்பதில்லை என்ற சபதத்துடன் இங்கு காணி வாங்கி வீடு கட்டினாளோ...? அவளது அப்பா இருந்திருந்தால் ஊரோடு இருந்திருக்கலாம்...? ஏதேதோ நினைவுகளுடன் அவன் செற்றியில் சாய்ந்தபடி இருந்தான்.

ஒரு சில நிமிடங்களில் வெளியே வந்தவளது கையில் ஒரு பார்சல்.

''என்ன இது......?''

''மரை இறைச்சி கொஞ்சம் கிடைச்சது. ரோஸ்ட் பண்ணினனான். அதுதான் உங்களுக்கு '

''உங்களுக்குச் சிரமம்' என்று அவன் குறைபட்ட பொழுது அவள் சிரித்தபடி கூறினாள்:

''நோ... சிரமமா... இதிலை என்ன சிரமம்... நல்ல சாப்பாடு வாய்க்கு ருசியாக் கடையிலை கிடைக்குமா? அதுதான்......''

அவளது குரலின் இதம் அவனுக்கு அம்மாவையும் அக்காவையும் ஞாபகப்படுத்தியது. ஏனோ அப்பொழுது வரதாவும் நினைவில் வந்தாள். வாய்க்கு ருசியாக வீட்டில் எது சமைத்தாலும் சிட்டுக் குருவி போல இவனுக்கு அவள் கொண்டு வருவது நினைவில் படர்ந்தது.

தன்னில் மிகுந்த ஈடுபாடு கொள்ளும் இன்னொரு ஜீவன் இவள் என்பதைப் புரிந்து கொண்டவனாய் அவளை மீண்டுமொருமுறை நன்றியுணர்வுடன் பார்த்துக் கொண்டு சைக்கிளை நிதானமாக மிதிக்கத் தொடங்கினான்.

அவன் போவதையே பார்த்தபடி அவள் அங்கு நின்றாள். கண்டி வீதியில் அவன் ஏறும் வரை அவள் நிற்பாள் என அவனுக்குத் தோன்றியது.

●

## 14

லீவு விட்ட மறுநாள் மட்டக்களப்புக்குப் புறப்பட்டான். முதலாம் தவணை லீவு ஆனபடியால் அக்கா வீட்டில் தானிருப்பாள் என்பது இவனது அனுமானம்.

மட்டக்களப்புப் புகையிரத நிலையத்திலிருந்து வின்சென்ட் மகளிர் கல்லூரி வரை ஒரு வாடகைக் கார் வைத்துக் கொண்டான்.

புகையிரத நிலையத்திலிருந்து நகரம் சிறிது தொலைவு பட்டதாகவே அவனுக்குத் தோன்றியது.

கல்லூரிக்குப் பக்கத்திலேயே அக்காவின் வீடு— கிழக்குச் சாய்வில் — வடக்குப் பார்த்து இருந்தது. வீடு பெரிதாக, வசதியாக இருந்தது. போர்கன்விலா மரங்கள் விதம் விதமாய்ப் பூத்துக் குலுங்கும் முன்றில்.

இவன் குரல் கொடுத்ததும் வயது முதிர்ந்த பெண் ஒருத்தி வந்து ''யாரு வேணுங்க?'' என்று கேட்டாள்.

''மிஸ்ஸிஸ் தர்மரத்தினம்''

அவளால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை. புரிந்து கொண்ட இவன், ''மகேஸ்வரி ரீச்சர்'' என்றான்.

''ரீச்சரம்மாவா? வாருங்க தம்பி..... !''

இவனும் அவளுடன் உள்ளே போனான். அங்கு அக்கா இருப்பதற்கான அடையாளம் எதுவுமே தெரியவில்லை.

''குளிக்கிறா...... வருவா உட்காருங்க......''

வரவேற்பறையில் கிடந்த செற்றியில் இவன் உட்கார்ந்து கொண்டான்,

அடக்கமாகவும் மிகவும் எளிமையாகவும் அந்த அறை இருந்தது. நவீன வசதிகள் எதுவும் குறைவின்றி இருந்தன. நஷனல் ரி. வி. கலர். ரூ இன் ஒன் ரேடியோ, பெடஸ்ரல் ஃபான், இள நீல வண்ணத்தில் ஜன்னல்களையும் கதவுகளையும் அலங்கரிக்கும் திரைச்சீலைகள். அலுமாரி நிறைந்த புத்தகங்கள். 'அக்கா வசதியாகத்தான் இருக்கின்றாள்' என நினைத்துக் கொண்டான்.

திரும்பியவன். அக்கா நிற்பதைக் கண்டு, இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான். அக்கா கண்களில் நீர் திரையிட நின்றாள். அவளது தோற்றத்தில் அப்படியொன்றும் பொலிவில்லை. உடல் உடைந்து போனது போன்ற தோற்றம். கண்களின் அடியாகக் கருவளையம் கண்டு விட்டது. கர்ப்பமாக இருப்பதை இவன் கண்டு கொண்டான்.

''கடிதம்போடக் கூடாதா'' அக்காதான் கேட்டாள்.

''நீ மட்டும் என்னவாம்... பட்டுக் கொள்ளாமல் தானே இப்பையெல்லாம் நடந்து கொள்ளுற... அது சரி... நீ நல்லா இருக்கிறயா...?''

பார்த்தாத் தெரியேல்லை! ஒரு வைப்பாட்டிக்குரிய 'மட்ரீரியல் வெல்த்' எல்லாம் இருக்கு''

''என்னக்கா இது...இப்படி''

தருமு தாலி கட்டித்தான் கூட்டி வந்தார். தாலி கட்டினா மனைவியாத்தான் இருக்க வேணுமா என்ன? கீப் ஆகவும் இருக்கலாம்......''

'.இன்னும் திருந்தவே இல்லை ...?''

''மாசத்திலை இரண்டொரு நாள் அலுவல் விஷயமாக வந்தா இத்தப்பக்கம் வாறார். சாப்பாடு உடுபுடவை எதிலையும் குறையில்லை, அவரில்லாமலே இதையெல்லாம் பார்க்க அவரோடை ஆள் படை இஞ்சை ஏராளம் பேர் இருக்கினை...''

அவள் பேசுவதை இவன் கேட்டிருந்தான்.

''பணம் கூட வாறபோது தர முயற்சிப்பதுண்டு. ஒன் பிரின்சிப்பிள் நான் வாங்கிறதில்லை. வீட்டிலை தங்கினா வாங்கிறதாச் சொன்னன். இஞ்சை என்ரை வயித்திலை வளறிறதாவது தகப்பனை வீட்டோடை கட்டிப் போடுதா பாப்பம்......''

''உன்ரை நல்ல மனசுக்கு எல்லாம் நல்லா நடக்கும் அக்கா......''

''நல்லாத்தான் நடக்கும்... இப்ப மருதானையிலை ஒரு

மலேக்காரியோடை சுத்திறதாக் கேள்வி''

அக்கா உடைத்து உடைத்துப் பேசுவது அவனுக்கு என்னவோ செய்தது. கவலையுடன் அக்காவைப் பார்த்தான்.

''வரதாப் பெட்டை தான் உன்னை ஏமாத்திப் போட்டாள்.....''

''அவளா? இல்லை. அவள் பாவம். எல்லாம் மாமாவோடை வேலை. அவளை அவர்தான் ஏமாத்திப் போட்டார். அம்மாவுக்கு ஒரு ஐயா... உனக்கு ஒரு தருமு... அவளுக்கு ஒரு அப்பா. எல்லாருமே இந்தப் பெண்களை என்ன மாதிரி.... ''

''நீ நல்லமாதிரி நடவன்ரா''

''நல்ல மாதிரியா?'' அவன் வரட்சியாகச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிற. நீ விரும்பிற மாதிரி, உன்னிலை உயிரை விடுறமாதிரி ஒருத்தி உனக்குக் கிடைக்காமலா போயிடுவாள்''

''வரதாவே இல்லாமைப் போனபிறகு யார் வந்து என்னக்கா..... ?''

''இது சென்றிமென்ஸ்..... இதெல்லாம் ஒரு சில நாளைக்குத்தான். காலம் எல்லாத்தையும் ஆத்திப்போடும்''

ஆறுதல் கூறியவள் தொடர்ந்து சொன்னாள்:

''உனக்கு ஒண்டும் அவசரமில்லை எண்டா ஒரு பத்து நாள் இங்க நிண்டு போவன். தருமுவும் வந்தாலும் வருவார். பாத்துப் பேசினது போலவும் இருக்கும்......''

அவன் பதில் ஏதும் தராமல் மௌனமாக இருந்தான். அக்காவின் பேச்சு அவனை சிந்தனையில் ஆழ்த்தியிருக்க வேண்டும்.

''என்ன பெரிய யோசனை. பேச்சுக்கூட காதிலை விழாமல். சரி சரி ... பிரயாண அலுப்பாய் இருக்கும், குளிச்சுப்போட்டு வா சாப்பிடு... சாப்பிட்டிட்டு ஒய்வெடு.....''

கூறியபடி அக்கா எழுந்து உள்ளே போனாள். அவன் துவாயுடன் கிணத்தடிப்பக்கம் போனான்.

குளிர்ந்த நீரை வாளி வாளியாக அள்ளித் தலையில் கொட்டிக் கொண்டான். பயணக் களைப்புக்கு அது இதமாக இருந்தது.

மனசு லேசானதும், ஏனோ அப்பொழுது அவனுக்கு சியாமளாவின் ஞாபகம் வந்தது.

'நீ விரும்பிற மாதிரி, உன்னிலை உயிரவிடுற மாதிரி ஒருத்தி உனக்குக் கிடைக்காமலா போயிடுவாள்...' அக்கா சொன்ன அந்தத் தேவதை சியாமளா தானோ.... ?'

'சியாமளா... சியாமளா...' என்று அவனது வாய் முணுமுணுத்துக் கொண்டது.

தவணைப் பரீட்சைக்கு முன்னதாக வந்த காய்ச்சல் அவனை நெட்டியாக உலர்த்தி விட்டது. பனடோலையும் டிஸ்பிறினையும் மாறி மாறிப் போட்டுப் பார்த்தான், காய்ச்சல் விட்ட பாடில்லை. மனமும் உடலும் பலஹீனப்பட்ட நிலையில் அவன் அதிக துயருற்றான் தான் தனித்துச் சூனியத்தில் விடப்பட்டதான உணர்வே அவனுள் எஞ்சியது.

இந்தக் காய்ச்சலுக்கு அம்மாவின் உப்புக் கஞ்சியும், பராமரிப்பும் அவனுக்கு வேண்டும் போலிருந்தது. அக்காவின் அன்பு;

வரதாவின் காதல், இதமான தழுவல் இவை இலலாமலே போய்விட்டதே எனக் கவலை வேறு கொண்டான்.

ஏதோ தனித்தீவில், மனிதப் பரிவும் பசையுமில்லாத பொட்டல் வெளியில் விட்டதான உணர்வுடன் தவித்த அவனை...

மூடிய கதவின் லேசான தட்டல் உசுப்பியது; தட்டலைத் தொடர்ந்து மெல்லிய, இனிமையான குரல், பெண் குரல்.

''உள்ளே வரலாமா......?''

குரலின் இழைவில் சியாமளா என்று இவனுக்குத் தெரிந்தது.

சிறிது அதிர்ந்தவன், எழுந்து கதவைத் திறந்தான்.

''என்ன இவ்வளவு தூரம்?''

''ஏன் வரக்கூடாதா......... ஆளையே பள்ளிக்கூடப் பக்கம் காணேல்லை. அதுதான் வந்து போகலாமே எண்டு..... ''

அவனைப் பார்த்ததுமே அவனது நிலைமையைப் புரிந்து கொண்டவளாய்:

''எத்தனை நாளாக் காய்ச்சல்'' என்றுகேட்டவள், அவனை நெருங்கி வந்து, நெற்றியில் வலது கரத்தால் ஸ்பரிசித்தாள்.

ஸ்பரிசித்த அவளது கரத்தை இவனது கரங்களும் ஆதரவாகப் பற்றிக் கொண்டன. ஒரு நிமிட நேரம் தனது கரத்தை விடுவிக்காமலே இருந்த சியாமளா அவனது கரத்தை ஆதரவாகப் பற்றியது போல......

'சியாமளீ......!' அவனது உள்மனம் குரலைக் கூத்திட்டது.

வேகம் கொண்ட நீர்ச்சுளியுள் அகப்பட்டு அமிழ்ந்து அள்ளுண்டு போகும் உணர்வு. அவனுடன் பூப்போல, அவனைத் தழுவியபடி, நீருடன் இழுபட்டவளாய் சியாமளாவும்......

''என்ன குளிச்சு முடிஞ்சுதா? வா சாப்பிட...'' அக்காதான் கூப்பிட்டாள்.

அவன் தூக்கம் கலைந்தவன் போல விழித்துக் கொண்டான்.

'அடிமனதில் குமைந்து கிடந்த உணர்வுகள் பீறிட்டுக் கொண்டு மேலே வருவதென்றால்......'

அவனுக்கு வியப்பாக இருந்தது. பயமாகவும் இருந்தது.

'இந்த வாழ்க்கை நீளும் பாலையாய் ... வெக்கையும் தகிப்பும் மிக்கதாய் இனியும் தொடருமோ..... ?'

பயத்தையும் மீறி, சியாமளாவின் பரிமள நினைவுகள் அவனுள் மீளவும் மிதப்புக் கொண்டன.

'அன்று பகல் முழுவதும் ஒரு தாயின் பரிவுடன் உடனிருந்து, மனதை அழுத்தும் துயரங்கள் வழிந்து லேசாகிவிட உதவி அவள்... அந்த சியாமளா வாழ் நாள் முழுவதுமே துணையாக... சிவகுமாரின் நினைவுகளை மறந்தவளாய் வருவாளா......? அவளால் வரமுடியுமா......?'

ஊருக்குப் போகும் வழியில் அவளைப் பார்க்க வேணும்... பார்த்துப் பேசவேணும்......'

மனதில் முகிழ்த்த தீர்மானத்துடன் தலையைத் துவட்டியபடி வீட்டினுள் சென்றான்.

அப்பொழுது எல்லாமே ஒதுக்கங்கொள்ள சியாமளாவின் நினைவு தந்த சுகம் மட்டுமே அவனுடன் பசுமையாகஇருந்தது.

●

# தீ வாத்தியார்

— வரதர்

தினசரி காலையும் மாலையும் அப்பா யோகாப்பியாசம் செய்வதை நான் பல ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறேன்.

இந்த யோகாப்பியாசப் பயிற்சிக்கு அவருக்கு யாரும் 'குரு' இருந்ததாகத் தெரியவில்லை. அந்த வழியில் அவரை ஊக்கியவர் யாரென்பதும் தெரியவில்லை. எங்களூரில் அப்படி வேறு யாரும் யோகாப்பியாசப் பயிற்சி செய்ததாகவும் தெரியவில்லை.

அப்பாவிடம் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று கடப்பை, சச்சிதானந்த யோகீஸ்வரர் என்பவர் எழுதிய யோகாசனம் பற்றிய நூல். பெரிய மொத்தப் புத்தகம். அதில் சச்சிதானந்த யோகீஸ்வரர் பத்மாசனமிட்டு யோகாசனத்தில் இருக்கும் ஒரு அழகான போட்டோப் படமும் இருந்தது. அப்பா அந்தப் புத்தகத்தைப் படித்தே யோகாசனப் பயிற்சியைத் தொடங்கியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அப்படி ஒரு நூலை வாங்கவோ, யோகாசனப் பயிற்சி செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை அவருக்கு உண்டாக்கவோ யாரோ ஒருவர் இருந்துதானிருக்க வேண்டும். அது யாரென்று தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் அப்போது யோகர் சுவாமியார் இருந்த காலம். அப்பாவும் யோகரும் சம காலத்தவர்கள். யோகர் சுவாமி பிறந்தது 1865 ம் ஆண்டென்றும், மறைந்தது 1964 ம் ஆண்டென்றும், திரு. ச. அம்பிகைபாகன் எழுதிய நூலிலே குறிப்பிட்டிருக்கிறார். அதன்படி அப்பா யோகர் சுவாமிக்கு பதினைந்து வயது இளையவர். இவ்வுலகில் சுமார் நூறு ஆண்டுகள் வாழ்ந்த சாதனை யோகர் சுவாமிக்குண்டு. அப்பா அறுபது ஆண்டுகளே வாழ்ந்தார். அப்பாவும், யோகர் சுவாமியும் சம காலத்தவரேயாயினும், யோகரோடு அப்பாவுக்குப் பழக்கம் இருந்ததில்லை.

யோகர் சுவாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பார்ப்பதற்காக ஒருமுறை அப்பா கொழும்புத்துறைக்குப் போனாராம். அப்பா யோகரை அதற்கு முன் கண்டதில்லை. வழி விசாரித்து யோகரின் வீட்டுக்குப் போயிருக்கிறார். அங்கேயிருந்த ஒருவரிடம் "யோகர் சுவாமி இருக்கிறாரா?" என்று கேட்டிருக்கிறார்.

''அவன் இங்கே இல்லை. கொழும்புக்குப் போய்விட்டான்!'' என்று அப்பாவுக்குப் பதில் கிடைத்தது. 'யாரிவன், சுவாமியை 'அவன் இவன்' என்று கதைக்கிறானே' என்று நினைத்துக் கொண்டு அப்பா திரும்பிவிட்டார்.

பிறகு யாரிடமோ இந்த நிகழ்ச்சியைச் சொல்லிக் கதைத்த போது, அப்பாவுக்குப் பதில் சொல்லித் திருப்பி அனுப்பியவர் தான் யோகர் என்று தெரியவந்தது.

மீண்டும் ஒருமுறை யோகர் சுவாமியைப் பார்ப்பதற்காக அப்பா பயணம் வெளிக்கிட்டார். — பயணந்தான். பொன்னாலை யிலிருந்து கொழும்புத்துறை பன்னிரண்டு மைல் தூரம். பஸ்ஸா, காரா? — மாட்டுவண்டிப் பயணந்தானே!

அப்பா தனது ஒற்றைத் திருக்கல் வண்டியில் புறப்பட்டார். இம்முறை என்ன நினைத்தாரோ, மிகச் சிறு பையனாக இருந்த என்னையும் கூட்டிக் கொண்டு போனார். அதிகாலை நாலு மணிக்கு எழுப்பி மாட்டுவண்டியில் புறப்பட்டது நினைவிருக்கிறது. வழிப் பயணமெதுவும் தெரியாது. வண்டிக்குள் நித்திரை. அப்பொழுது எனக்கு ஏழெட்டு வயதுதானிருக்கும்.

ஒரு வீட்டின் தலைவாசல் போன்ற ஒரு இடத்தில், சுமார் பதினைந்து இருபது பேர்கள் கூடியிருந்தார்கள். கூட்டத்தின் தலைவர் போல ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவர்தான் யோகர் சுவாமியாக இருக்க வேண்டும். குத்துவிளக்கு ஏற்றியிருந்ததும், கற்பூரம் எரிந்ததும், யாரோ தேவாரம் பாடிக்கொண்டிருந்ததும் என் நினைவின் அடி ஆழத்திலிருந்து நிழற் காட்சிகளாக இப்போது எனக்குத் தெரிகின்றன.

அந்த அடியார் கூட்டத்தில் நானும் அப்பாவும் ஒரு பக்கமாக உட்கார்ந்து கொண்டோம். தேவாரம் பாடி முடிந்ததும் ஒவ்வொ ருவராக யோகர் சுவாமியின் அருகில் சென்று அவரை வணங்குகி றார்கள். சிலர் கற்கண்டு, வாழைப்பழம் முதலிய பொருள்களை அவர் முன் படைக்கிறார்கள்.

அப்பா அவரை வணங்கி எழுந்த பிறகு நானும் நிலத்தில் நீளக் கிடந்து (அட்டங்கமாக) யோகரை வணங்கி எழுகிறேன்.

இந்த இடத்தில் ஒரு புது நினைவு. இப்போதெல்லாம் கோயில் களில் கூட தரையில் குப்புறப் படுத்து அட்டாங்க வணக்கம் செய்யும் பழக்கம் குறைந்து வருவது போலத் தெரிகிறது. இதைப் பற்றி ஏன் எழுதுகிறேனென்றால், இந்தக் காலத்தில் -- சில ஆண் டுகளுக்கு முன்னால் நான் கொழும்பு சென்றிருந்த போது நண் பர் சில்லையூர் செல்வராசனைச் சந்திப்பதற்காக அவருடைய வீட் டுக்குப் போயிருந்தேன். நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது அவருடைய புகழ்வாய்ந்த மனைவி கமலினியும் ஒரு சிறுவனும் அந்த இடத்துக்கு வந்தார்கள். சிறுவனைத் தங்கள் மகன் என்று எனக்கு அறிமுகப்படுத்தி விட்டு, அவனிடம் ஏதோ மெதுவாகச் சொன்னார் செல்வராசன். உடனே அந்தச் சிறுவன் என் காலருகே தரையிலே குப்புறப்படுத்து அட்டாங்கமாக வணக்கம் செய்தான்!

ஒரு கணம் திணறிப் போனேன். 'இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பண்பாடா?' என்று.

இது இருக்க......

நான் யோகர் சுவாமியை வணங்கி எழுந்ததும் ''என்ன பெயர்?'' என்று அவர் கேட்டார்.

நான் 'வரதராசா' என்று மிக அடக்கமாக எனது பெயரைச் சொன்னதும், அவரே தம் முன்னாலிருந்த தட்டிலிருது கொஞ்சம் கற்கண்டை எடுத்து என்னுடைய கைகளில் தந்தார். பிறகு, ''நீ பின்னுக்கு நல்லாயிருப்பாய்'' என்று ஒரு வாழ்த்தும் சொன்னார். யோகர் சுவாமி இப்போதும் என் நினைவில் இருக்கிறார்.

அந்த ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு அப்பாவுக்கும் யோகர் சுவாமிக்குமிடையே எவ்விதத் தொடர்பும் இருந்ததில்லை!

மீண்டும் யோகரிடம் அப்பா போனதில்லை. 'உவரிடம் எனக்கு அலுவலில்லை' என்று கருதியிருக்கலாம்.

அப்பாவின் ஒற்றைத்திருக்கல் மாட்டு வண்டிக் கூடாரத்தின் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய 'போட்' பலகை இருக்கும். அதில், ''தி. சண்முகம், தொல்புரம், கமம்' என்று மூன்று வரிகள் எழுதியிருக்கும். ஆனால் அப்பாவுக்கு கமம் (விவசாயம்) இருந்ததில்லை. அந்தக் காலத்தில் விவசாயத் தேவைக்கான வண்டிகளுக்கு வரி கட்டத் தேவையில்லை. ஏனைய வண்டிகளுக்கு ஏதோ ஒரு வரி இருந்திருக்க வேண்டும். அதனால் எல்லா வண்டிக்காரர்களுமே தங்கள் வண்டியில் 'கமம்' என்று தான் எழுதியிருப்பார்கள்! அப்படி எழுதுவதை ஒரு தவறாக யாரும் கருதுவதில்லை.

அப்பாவின் ஊரும் 'பொன்னாலை' தான். ஆனால் பொன்னாலைக்குரிய விதானையார் தொல்புரத்திலேயே இருந்தார். தொல்புரத்தில் ஒரு பகுதியாகவே பொன்னாலைக் கிராமமும் சட்டப்படி கருதப்பட்டது.

அப்பாவுக்குக் 'கமம்? இருக்கவில்லை. ஆனால் ஒரு 'கடை' இருந்தது. அந்தக் கடைக்குத் தேவையான பொருட்களை சங்கானை, சுன்னாகம் சந்தைகளிலும், பெரியபட்டணத்திலும் (யாழ்ப்பாணம்) போய் வாங்கி வருவதற்காக அவருக்கு அந்த வண்டி தேவையாக இருந்தது. எப்போதாவது எங்கள் குடும்பம் கோயில்களுக்கோ, உறவினர் வீடுகளுக்கோ போய் வருவதற்கும் அந்த வண்டி உபயோகப்பட்டது.

இன்று ஓடிக்கொண்டிருக்கும் உலகத்துக்கு மாட்டு வண்டி தோதா இல்லைத்தான். ஆனால் அன்றைய உலகம் இப்படியெல்லாம் 'அவசரப்படாத' உலகம். அதற்கு மாட்டுவண்டி மிகத் தோதான வாகனம். எரிபொருள் செலவு எதுவுமில்லை. மாட்டுக்கான தீவனம் மட்டுந்தான் செலவு. அன்றைய கிராமத்திலே அது அவ்வளவு பெரிய விடயமல்ல. வண்டிக்கான பராமரிப்புச் செலவு, 'இல்லை' என்று சொல்லக்கூடிய அளவுக்கு எப்போதுதான் வரும். ஊர்த் தச்சரும், கொல்லரும் அதைச் சொற்ப செலவில் செப்பம் செய்து விடுவார்கள்.

இன்று 'போக்கு வரத்து' என்பது பெரிய பிரச்சினையாகவும், பெருஞ் செலவை உண்டாக்குவதாகவும் வளர்ந்து நிற்கின்றது! 'கட்டைவண்டி' க் காலத்தின் அமைதியும் நிம்மதியும் இனி ஒரு போதும் வராது!

'கமம்' அல்லாத வண்டிகளுக்கு ஆண்டு தோறும் எத்தனை ரூபா வரிப்பணம் கட்டவேண்டியிருந்ததென்பது தெரியவில்லை.

ஆனால், இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட உழைப்பாளி களான ஒவ்வொரு ஆண்மகனும், ஆண்டு தோறும் ஆளுக்கு ஒரு ரூபா வரிப்பணம் கட்ட வேண்டியிருந்தது. அந்த வரி எதற்கு? அவர் உயிரோடு ஊரில் வாழ்வதற்குத்தான். அந்த வரிக்குப் பெயரே 'தலைவரி' என்பதுதான்!

இந்தத் தலைவரியைக் குறித்த தவணைக்குள் கட்டிவிட வேண் டுமென்று அரச அறிவித்தல் வரும்.

இப்போது அரச அறிவித்தல்கள் செய்தித் தாள்களில் வரும். வானொலியில் வரும், தொலைக்காட்சியிலும் வரும். அந்தக் காலத்தில் இந்த மக்கள் தொடர்புச் சாதனங்கள் எதுவுமே மக்க ளிடம் செல்வதில்லை. எனினும், அரச அறிவித்தல்கள் யாவும் கிராமம் கிராமமாக மூலை முடுக்குகளில் வாழ்ந்த மக்களையெல் லாம் ஒழுங்காகச் சென்றடைந்தன.

எப்படி?

அந்தக்கால அரச அறிவித்தல்கள் எல்லாம் 'பிரசித்தம்' மூலம் வரும்!

அரசாங்க ஏஜண்டர் மணியகாரனுக்கு அறிவிக்க, மணியகா ரன் உடையாருக்கு அறிவிக்க, உடையார் விதானையாருக்கு அறிவிப்பார். அறிவிந்தல் கிடைத்த உடனே விதானையார், வழக் கமாக ஒழுங்கு செய்து வைத்திருக்கும் பிரசித்தகாரனை (பறை யடிப்பவன்)க் கூப்பிட்டு, ஒரு கடிதத்துண்டில் அறிவித்தலை எழு திக் கொடுப்பார். அவனுக்கு வாசிக்கத் தெரியாததலால் அந்த வாசகத்தை அவனுக்கு வாய் மூலம் சொல்லிப் பாடமாக்குவித்து அனுப்புவார்.

ஒழுங்கையில் 'டும், டும், டும்' என்று பறை ஒலி கேட்டதும் எல்லாரும் படலைகளைத் திறந்து கொண்டு பிரசித்தகாரனை எதிர்நோக்கி நிற்பார்கள். கிட்ட வந்ததும் ''என்ன பிரசித்தம்?'' என்று கேட்பார்கள். அவனும் விதானையார் பாடமாக்குவித்து அனுப்பிய அறிவித்தலை ''இத்தால் சகலமானவருக்கும் தெரிவிப் பது.....'' என்று முறையாக எடுத்துச் சொல்வான். மிக அருமை யாக யாராவது 'படித்தவர்கள்' சந்தித்தால் அவர்களிடம் விதா னையார் எழுதிக் கொடுத்த அறிவித்தலை 'நயினார் பாக்கவும்' என்று சொல்லிக் காட்டுவான்.

இந்தப் 'பறையடிக்கிற' வர்களுக்கு ஊரிலுள்ள எல்லா மனி தர்களினதும் குலம் கோத்திரம் எல்லாம் அப்பொழுது தெரிந்தி ருந்தது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களுக்குரிய பட்டப்

பெயர் ஒன்று தெரிந்து வைத்துக் கொண்டு அந்தப் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். எங்கள் வீட்டாரை 'செகராச சேகரம்' என்பார்கள். இது என்ன பட்டம் என்று எனக்குத் தெரியவில்லை. முன்பு சில காலம் 'நாங்கள் செகராச சேகர அரச பரம்பரை யாக்கும்!' என்று பொருமையாக நினைத்ததுண்டு. அது எப்படி இருந்தாலும் இப்போது நான் 'பரம்பரை'க்கு மதிப்புக் கொடுப் பதில்லை. பரம்பரைக்கு மதிப்புக் கொடுத்த காலம் 'மலையேறி விட்டது!'

இப்போது இன்றைக்கு, யாரிடம் ஒழுக்கமும், அறிவும், பத வியும், செல்வமும் இருக்கிறதோ அவர்தான் உயர்ந்தவர்; இந்த நான்கு பொருள்களும் ஒருவரிடம் வரிசைக் கிரமப்படி மேலோங்கி நிற்பதை அறிந்து அவருடைய மதிப்பையும் கணக்கிட்டுக் கொள் ளலாம். அப்படி உயர்ந்த மதிப்புப் பெறுகிறவர்தான் இன்று உயர்ந்த 'சாதி'. பெரும்பாலும் இன்று நியாயம் நடப்பதாகவே தோனறுகிறது.

இது இருக்க.

பறையறைந்து பிரசித்தம் செய்யும் முறை மிகப் பழைய காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் வழக்கமாயிருந்திருக்கிறது. தமிழ் நூல்கள் பிரசித்தகாரனை 'முரசறைவோன்' என்று கூறும்.

அப்பாவின் மாட்டு வண்டி நினைவுக்கு வந்ததும், அதனுடைய அமைப்பு என் கண் முன்னே தெரிகிறது. வெயிலுக்கும் மழைக் கும் பாதுகாப்பாகப் பயணம் செய்யக் கூடிய ஒரு சாதாரண வண்டிதான் அது. அலங்காரங்கள் எதுவும் கிடையாது. அப்போது சில பணக்காரர்களிடம் அழகான வில் வண்டிகள் இருந்தன. அப் பாவின் வண்டி சாதாரண 'ஏபோட்டி' கார் என்றால், அவை கள் நவீன யப்பானிய டயோட்டா, டற்சன் மாதிரியிருக்கும்! அந்த வில்வண்டி அமைப்புகளெல்லாம் எமது அடுத்த சந்ததிக்குத் தெரியாமல் போகக்கூடும்!

வில் வண்டிக் கூடாரங்களெல்லாம் நல்ல பிரம்புகளினால் அமைக்கப்பட்டு அதன்மேல் உயர்ந்த பூத்துணிகளும், அதன்மேல் மெழுகுசீலையும் போட்டு அமைக்கப்பட்டிருக்கும். அழகாக வண் ணம் பூசப்பட்டிருக்கும். உள்ளே உட்காரும் இடத்துக்கு வைக் கோல் பரப்பி அதன் மேல் புற்பாய் விரிக்கப்பட்டிருக்கும்.

எங்கள் வண்டிக்கு ஒருமுறை கூடாரம் அமைத்தது எனக்கு நினைவிருக்கிறது. பொன்னாலைக் கிருஷ்ணன் கோவிலுக்குப் பின் னாலுள்ள தரவையில் அலரிச் செடிகள் நிறைய இருந்தன. நல்ல றோசாப் பூக்களைப் போல, அதே நிறத்தில் கொத்துக் கொத் தாகப் பூத்துச் சொரியும் போது மிக அழகாக இருக்கும். ஆனால் அலரிப் பூக்களுக்கு வாசனை கிடையாது. தற்கொலை செய்ய விரும் புகிறவர்கள் இந்த அலரியின் விதைகளையோ, வேர்களையோ அரைத்துச் சாப்பிட்டு உயிரை விடுவதாகச் சமீபத்தில் கேள்விப் பட்டிருக்கிறேன்.

அப்பா ஒரு கத்தியுடன் போய், அலரிச் செடிகளில் மிக நீண்ட தடிகளைப் பார்த்து பத்துப் பதினைந்து தடிகளை வெட்டிகொண்டு வந்தார். வீட்டு வளவுக்குள் அவைகளை நிலத்தில் போட்டு மேலும் கீழும் உக்கிய பனை ஓலைகளைப் போட்டு எரித்தார். ஓரளவுக்கு எரிந்ததும், தடிகளை வெளியே எடுத்து அவற்றின் தோல்களை உரித்தார். நல்ல துப்பரவாகத் தோல்கள் கழற்றி, தடிகள் வெள்ளை வெளேரென்று காணப்பட்டன.

அடுத்த நாள் கூடாரம் கட்டுவதில் தேர்ச்சி பெற்ற ஒரு தொழிலாளி வந்தார். அப்பாவும் அவருமாக, அலரித் தடிகளை வண்டியின் இரு பக்கத் தட்டிகளிலுள்ள துவாரங்களில் பொருத்தி மேற்பக்கத்தை அளவான உயரத்தில் வளைத்துப் பொருத்திக் கட்டினார்கள். முன் பக்கமும் பின்பக்கமும் சற்றே நீண்டு இருக்கக் கூடியமாதிரி தடிகள் வளைத்துக் கட்டப்பட்டன. அதன் பிறகு மெல்லிய கமுகம் சலாகைகளை குறுக்குப் பாட்டில் வைத்துக் கட்டினார்கள். கூடு சரியாக அமைந்து விட்டது. அதன் மேல் நல்ல பனை ஓலைப் பாய்களை இரண்டு பட்டாகப் போட்டு மூடி, அவற்றின் ஓரங்களைக் கூடாரத்தின் அளவாக வெட்டினார்கள். அதன்மேல் 'தார்ச்சாக்கு'ப் போட்டு மூடி ஓரங்களைத் தடிகளுடன் சுருட்டித் தைத்து விட்டார்கள். இந்தத் தார்ச் சாக்குகள் எந்த மழையையும் தாங்கும். இப்படிக் கட்டப்பெற்ற கூடாரம் பல ஆண்டுகளுக்குப் பழுதுபடாமல் நின்றுபிடிக்கும்.

மிகச் சுருக்கமாகச் சில வரிகளில் இந்தக் கூடாரம் கட்டுவது பற்றி எழுதிவிட்டேன். ஆனால் கூடாரத்தைக் கட்டி முடிக்க இரண்டு நாட்கள் சென்றதாக நினைப்பு. ஒவ்வொரு வளையத்தையும் மிக அவதானமாக அளவு தவறாமல் தொழில் நுட்பத்தோடு செய்தார்கள். பயிற்சி இல்லாதவர்கள் இப்படியான வேலைகளைச் செய்ய இயலாது.

அந்தக் காலத்தில் இப்படிப் பல தேர்ச்சி பெற்ற கைவினைஞர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

கோயில் சப்பரத்துக்குப் படல் கட்டும் சிலர் பச்சைத் தென்னோலையிலேயே, இடையிடையே மஞ்சள் குருத்தோலைகளை இணைத்து அவற்றில் அழகிய சித்திரவேலைகளைச் செய்வார்கள்.

எங்களூரில் 'நாராணிச் சட்டம்பியார்' என்று ஒரு வயோதிபர் இருந்தார். நான் சிறுவனாக இருந்தபோதே அவர் காலமாகி விட்டார். அவர் பல நுட்பமான கைவேலைகள் செய்வாரென்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இளைஞர்களுக்கு 'எட்டு மூலைப் பட்டம்', 'கொக்குப் பட்டம்' முதலிய பட்டங்களை மிக அழகாகச் செய்து, அவைகளுக்கு 'விண்'ணும் கட்டிக் கொடுப்பாராம் நாராணிச் சட்டம்பியார்.

ஆடிமாதம் வந்துவிட்டால், இளைஞர்கள் மட்டுமல்ல, சில பெரியவர்களும் பெரிய பெரிய பட்டங்களுடன் கடற்கரைக்கு வந்து பட்டம் விடுவது வழக்கம். பட்டங்கள் உயரப் போனதும், அவற்

றில் கட்டியிருக்கும் 'விண்'கள் 'ஞொஞ்ஞ்.....' என்று பெரிதாக ஓசை எழுப்பிக் கொண்டிருக்கும்.

பெரியவர்கள், பெரிய பெரிய பட்டங்களைத் தடித்த சணல் நூல்களில், இரண்டுபனை மூன்று பனை உயரங்களில் பறக்க விட்டுக் கொண்டிருக்க, மிகச் சிறுவர்களாகிய நாங்கள், ஒரு பெரிய தென்னீர்க்கை எடுத்து, அதன் குறுக்காக ஒரு பனைஈர்க்கை தையல் நூலினால் கட்டி, பனை ஈர்க்கை ஒரு மாதிரி இருபக்கமும் வளைத்து நடுவிலுள்ள தென்னீர்க்கின் முனைகளுடன் நூலிலே பொருத்தி, அதற்கு அளவாக ஒரு கடதாசி எடுத்து அதன் ஓரங்களில் சோற்று பசையைப் பூசி ஒட்டி 'சீனாப்பட்டம்' செய்வோம். எங்களுக்குச் சரியாக அது அமையாவிட்டால், சற்றே மூத்த அக்காவையோ அண்ணையையோ கெஞ்சி, அவர்கள் சொல்கிற வேலைகளெல்லாம் செய்து கொடுத்து, அவர்களைக் கொண்டு செய்விப்போம். அந்தப் பட்டத்துக்கு 'முச்சு' கட்டியபின் பழைய வேட்டியின் கரையைக் கிழித்து அதற்கு 'வால்' கட்டுவோம். அந்தப் பட்டத்தின் முச்சில் தையல் நூலைக் கட்டியதும், ஒரு நண்பன் அதைத் தூக்கிப் பிடித்துவிட, நாங்கள் நூலைப் பிடித்துக் கொண்டு தெரு நீளம் ஓடுவோம். நாங்கள் ஓடும் வரையும் பட்டமும் பறக்கும். நாங்கள் நின்றதும் அதுவும் தரையில் படுத்துவிடும். எப்போதாவது சில சமயங்களில் காற்று வளமாக அடிக்க, பட்டம் சற்றே உயரப் பறப்பதுமுண்டு. அப்படிப் பறந்து தெரு ஓரத்திலுள்ள மரக் கொப்புகளில் சிக்கிக் கொள்வதுமுண்டு.

அப்போதெல்லாம் ஆகாயத்தில் மிக உயரத்தில் விண் கூவிக் கொண்டு பறக்கும் பெரிய எட்டுமூலைப் பட்டங்கள்தான் எங்கள் இலட்சியக் கனவுகளாக இருந்தன.

இப்படி எத்தனை விளையாட்டுகள்!

எந்த விளையாட்டும் தொடர்ந்து நெடுநாளைக்கு நீடிப்பதில்லை. ஏதோ சொல்லி வைத்தது போல, கொஞ்ச நாட்களில் விளையாட்டும் மாறிவிடும். வட்டக்கோடு, கெந்தியடித்தல், 'வார்' ஓட்டம், வளையம் உருட்டுதல், ஒளித்து விளையாடுதல், இவைகளுக்கெல்லாம் 'ராஜா' போன்ற பெரிய விளையாட்டு, 'தாச்சி மறித்தல்'. இதைக் 'கிளித்தட்டு' என்றும் சொல்வார்கள். இந்த விளையாட்டைக் கொண்டு நடத்தும் சூத்திரதாரிக்கு விளையாட்டில் 'கிளி' என்றுதான் பெயர்.

இவற்றைவிட, வருடப்பிறப்பு வந்துவிட்டால், பெரிய மரங்களில் ஊஞ்சல் கட்டி ஆடுவது, கைவிசேஷக் காசை வைத்துக் கொண்டு 'காசு கட்டுவது' தீபாவளியன்று கடற்கரையில் நிற்கும் மீன்பிடிகாரரின் சிறிய தோணிகளையும், கட்டுமரங்களையும் எடுத்துக் கொண்டு கடலில் தோணியோட்டுவது — இப்படிக் காலத்துக்குக் காலம் விளையாட்டுகளும் மாறிக்கொண்டேயிருக்கும்.

(தொடரும்)

உங்கள் உணவுத் தேவைகளுக்கு

பனை வெல்லம்
பனம் சீனி
பனம் பாணி

முதலியவற்றைப் பாவியுங்கள்.

கூடிய பயன்பாடு
ஆரோக்கியத்திற்கு ஏற்றது
தடடுப்பாடின்றிக் கிடைக்கக் கூடியது

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு வழங்குவீர்

கட்டைவேலி — உடுப்பிட்டி

# தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

கரவெட்டி.

# பேராசிரியர் கா. சிவத்தம்பி

## அவர்களுக்கு

# ஒரு விழா - மணி விழா

அநு. வை. நாகராஜன்

'இந்நாட்டுக் கல்விப் பாரம்பரியத்துக்கு, இலங்கைப் பல்கலைக் கழகம் எதனைச் சாதித்திருக்கிறது' என்று யாராவது கேட்டால், அதற்கான பதிலைத் திருப்தியாக யாருங் கூற முடியாது. இது ஒரு துரதிஷ்டமே! இந் நிறுவனத்தின் வரலாற்றைச் சற்றும் பின்னோக்கிப் பார்த்தால்—

ஐம்பதுகள் வரை இக் கழகம் ஆண்டுக்குச் சில பட்டதாரிகளை 'பிட்டுக்குழற் பிட்டு' கள் போல் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதன் பின் (50 க்குப் பின்) இந் நாடு இடது சாரிப் பாணியில் சிறிது காலம், தத்துநடை பயின்ற காரணத்தால், 'தேசியக் கண்ணோட்டம்' என்ற முகத்திரைக்குள் நின்று, ஏதோ செய்ய முயன்றது. அதுவும் 77 க்குப் பின் திசை திரும்பி — ஏதோ ஒரு பாணியில், மீண்டும் குழற்பிட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டது. ஆயினும் 60 களில் தேசிய மொழிக் கல்வி மூலம் ஒரு கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுக்க முனைந்த காலப் பகுதியில் தமிழ் மொழித்துறை சில நல்ல முயற்சிகளை முன்னெடுக்க முனைந்ததை யாரும் மறுப்பதத்கில்லை. அந்த வகையில் இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறை தனித்துவமாக நிற்பதைக் காண முடிகிறது. குறிப்பாக — பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையின் காலத்தையடுத்து, பேராசிரியர் க. கைலாசபதி காலம் 'ஆக்க இலக்கிய'த்தில் நல்ல சிந்தனை முனைப்புகளைப் பாய்ச்சி சிறப்பதைக் காணலாம்.

இதற்காக — இலங்கைப் பல்களைக் கழகத்தை நாம் வணங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கு — தமிழ் ஆக்க இலக்கியத்துறை நவீன சிந்தனையுடன் சிந்திக்கப் பெறவும், செயற்படவும் முனைப்பாக நின்ற இரு ஜாம்பவான்களை நினைவு கூர்வது நல்லது இவர்களில் ஒருவர் போராசிரியர் க. கைலாசபதி மற்றவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. முன்னவர் அமரராகி விட்டார். மற்றவர் இன்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசானாகவும் — நுண்கலைத்துறை முதல்வராகவும் வீற்றிருந்து, மணிவிழாக் காணும் அகவையராகி, எம்மால் மதிக்கப்பட்டு வருகிறார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு கடந்த 10-5-92ல் அறுபது வயது ஆரம்பித்திருக்கிறது. அதனை முன்வைத்து—

அன்றைய தினம் அன்னாரது இலக்கிய நண்பர்களும், ஆர்வலர்களும் மணியான ஒரு மணிவிழாவினை அவருக்கு நடத்தி மகிழ்ந்தனர்.

பேராசிரியர் (அமரர்) சு. வித்தியானந்தனுக்கு அளித்த மணிவிழாவை அடுத்து — பல்கலைக் கழகத்துக்கு அப்பால், கலை இலக்கியவாதிகள் வரலாற்று முக்கியத்துவங் கொண்ட ஒரு சிறந்த விழாவை பேராசிரியர் கா. சி. க்கு வழங்கியுள்ளார்கள்.

10 - 05 - 92 மாலையில், நல்லூர் முருகன் ஆலய முன்றிலில் பேராசிரியர் அவர்கள் மங்களகான இசையுடன் கல்விமான்கள் — அறிஞர்கள் — இலக்கிய ஜாம்பவான்கள் — கலை இலக்கிய ஆர்வலர்கள் — சுவைஞர்கள் புடைசூழ வரவேற்கப்பட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கேட்போர் அரங்க மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றார். அலங்கார அரங்க மேடையை அறிஞர்கள் அலங்கரிக்க — மண்டபம் நிறைந்த அவையோர்கள் பூரிப்புடன் வீற்றிருக்க — பேராசிரியர் 'நந்தி' மணிவிழாத் தலைமையை ஏற்று நெறிப்படுத்தினார். பேராசிரியர் நந்தியின் தலைமைப் பேருரை வழமையிலும் மேலாக — மிகவும் நீண்டிருந்த போதிலும் சொல்ல வேண்டியதை இதய சுத்தியோடு நேர்மையாகவும், ஆணித்தரமாகவும் கூறியமை மிகவும் கனதியாக இருந்தது. குறிப்பாக, பேராசிரியர் சிவத்தம்பியின் தமிழ் இலக்கிய ஈடுபாடு — தமிழ் — ஆங்கில மொழியாற்றல் — பல்வேறு நாட்டுச் சம்மேளனத் தரிசனங்கள் — நெருக்கடி காலத்துச் சமூகப் பணிகள் போன்ற விடயங்கள் மிகவும் அழுத்தமாக எடுத்துக் கூறியமை வரவேற்கப்பட வேண்டியவையே. மேலும். அவர் தனது உரையில்— பேராசிரியரின் கருத்துகள் — இலக்கிய நோக்குகள் — அநுபவங்கள் யாவும் அவரது சுய வரலாற்று ஆவணமாக அவர் வாழும் காலத்திலேயே தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் முன் வைத்தார். மணிவிழா வெறுமனே 'மணியடிப்போடு' நில்லாது, ஆக்கபூர்வமான செயலாக அமைய, அவர்காலத்து நண்பர்களின் பங்களிப்புடன் நல்ல படிமங்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்றுங் கேட்டுக் கொண்டார்.

இவ் விழாவில்— பல்துறை சார்ந்த அறிஞர்கள் பலர், மணிவிழா நாயகருக்கு ஆசியுரை, வாழ்த்துரை, பாராட்டுரை, நயப்புரை எனப் பாவாலும், உரையாலும் சிறப்புகள் பல வழங்கி மகிழ்ந்தனர். அவர்கள் வரிசையில், நல்லை ஆதீன முதல்வர்— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார், சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். வித்துவான் 'சொக்கன்', 'மாமனிதர்' எஸ். ரி. அரசு, மல்லிகை டொமினிக் ஜீவா, யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா, கவிஞர் புதுவை இரத்தினதுரை, கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் என்போர் பாராட்டும், நயப்பும், வாழ்த்துங் கலந்த உரைகளை நல்கினர்.

மணிவிழாக் குழுவினர் சார்பில், யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தனது தொடக்க

வுரையுடன், பேராசிரியருக்குப் பொன்னாடை புனைய— கவிஞர் 'சோ. ப.' வாழ்த்துப்பா இயற்றியுரைக்க— அதனை திரு. பொன். சுந்தரலிங்கம் இன்னிசையுடன் பாடிக் கொடுத்தார். இதே வேளை யில், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவினர் மணி நாயக ருக்குப் பாமாலை — பூமாலையுடன் பொன் மாலையும் அளித்துக் கௌரவித்தனர்.

இவ்விழாவில்— மணிவிழாக் கண்ட பேரசிரியருக்கு, மலை மலையாக மலர் மாலைகள் சூட்டப்பெற்ற காட்சி கண்கொள் ளாக் காட்சியாக இருந்தது. யாழகத்து முக்கிய இலக்கிய நிறுவ னங்களும், கலை இலக்கியப் பிரியர்களும் இதிற் பங்கு கொண்ட காட்சியும் ஒரு சிறப்பம்சமாகும். மேலும். இதில் இன்னுமொரு சிறப்புக் காட்சியும் இணைந்திருந்தது. பேராசிரியரின் துணைவி யாரும் மேடையிற் சமூகமளித்து, இளமைப் பூரிப்புடன், பொறு மையின் ஊற்றாய்க் காட்சி தந்து இருந்தார்.

பேராசிரியர் தனது பதிலுக்குப் பல கருத்துகளைத் தருவார் என எதிர்பார்த்தோம். ஆனால் — அன்று. மிகவும் இரத்தினச் சுருக்கமாக இரண்டொரு புள்ளிகளை மட்டும் கோலமிட்டு விட்டு அமைதியாக அமர்ந்து விட்டார். அவர் உரைக் கோலத்தின் புள் ளிகள் குறிப்பாக—

> சமகாலத்து நெருக்கடியை மனங்கொண்டு. எதிர்காலத்தை வலுவுள்ள — கனதியான சமுதாயத்திடம் கையளிக்க வேண்டும்.
>
> படைப்பிலக்கியத்தில், புதிய சிந்தனைத் தெளிவுகள் பிறக்க — புதிய புதிய படிமங்களை எமது செல்நெறிக்கு அமைவாகப் படைக்க வேண்டும்

என்ற கருத்துகள் தொனித்தன.

இம் மணிவிழா வியப்புரைகளில் பலரும் பல்வேறு கோணங் களில் நின்று (வழமைப்படி) கருத்துகள் வழங்கினார்கள். அவை யாவும் செவிக்கு இன்பந் தருவனவாக இருந்தன ஆயினும், 'ஈழத்து கம்பன் அடிப்பொடி' ஜெயராஜ் மட்டும், விழா நாயக ரின் ஆளுமையை விதந்ததோடு, அவரின் சிந்தனையை நெருட ஒரு வினாவையும் பகிரங்கமாக எழுப்பிவைத்தார். அவ்வினாவின் தொனிப் பொருள் மிகவும் காத்திரமாகப் பலருக்குப் பட்டது. அதில், பேராசிரியரின் ஆளுமைக்குத் தக்கதாய், அவர் பின்னால் வரும் இலக்கிய வாரிசு வளர்க்கப்படவில்லை என்ற 'பொடி' வைக்கப்பட்டது.

இதற்கான பதிலை, அன்று பேராசிரியர் தரவில்லை. அதனை அவர் வெகுவிரைவிற் செயற்படுத்த விழைந்துவிட்டார் போலும்.

இருப்பினும்—

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஈழத்தின் ஆக்க இலக்கி யத்துக்கு ஒரு புரவலனாய் — வழிகாட்டியாய் நிற்கிறார் என்ற பெருமையை முன்வைத்து, மணி மணியான நினைவுகளை அவர் பால் செலுத்தி மகிழ்வோமாக. ●

# ஒரு கடிதம்

மல்லிகை இன்று அச்சுப்பதிவு செய்யும் தாள் பற்றி யோசிக்கும் இவ் வேலையில் அது வெளிவர முயன்றுழைக்கும் சிரமம் தெரிகிறது. றூல் போட்ட கொப்பித் தாளில் வரும் மல்லிகை இன்று எப்படி இருந்தாலும் ஒரு பத்து இருபது வருடங்களுக்குப் பின்னர் நிச்சயம் பேசப்படும். இந்த இதழ்களைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என்பது எனது எண்ணம்.

இலக்கிய வேலை என்பது எத்தகைய சிரமங்களுக்கு மத்தியிலும் நின்று பிடிப்பது. அது உங்களுக்குக் கைவந்துள்ளது. இலக்கிய உலகில் ஓர் உண்மை, பரபரப்பாகப் பேசப்பட்டு ஆரம்ப காலங்களில் முன் வருபவர்கள் கடைசி வரையும் நின்று பிடிப்பதில்லை. வழி மாறி, திசை மாறிச் சென்று விடுவது நமது நாட்டுத் துரதிர்ஷ்டங்களில் ஒன்று.

உங்கள் காலத்தில், உங்கள் மட்டத்தில் எத்தனை பேர்கள் வந்தார்கள்! இன்று அவர்களில் எத்தனை பேர் காலூன்றி இந்தத் துறையில் நின்று பிடிக்கின்றனர்? நினைக்க அதிசயமாக இல்லையா? இந்த அளவு கோலை வைத்துத்தான் உங்களையும் மல்லிகையையும் அளக்கிறேன். ஆரம்ப காலத்தில் மல்லிகையின் ஆசிரியர் குரலில் கேட்ட சத்தங்கள் இன்று இல்லை. பல கோரிக்கைகள் இன்று நடை முறைச் சாத்தியமாகி வருவதை மல்லிகை பார்க்கக் கூடியதாகவுள்ளது.

கடந்த காலங்களில் பல புதிய எழுத்தாளர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியது மல்லிகை. சமீப காலங்களில் அந்த வேலையில் பின்னடைவு காணப்படுகிறது. என்ன காரணமென இதை யோசிக்க வேண்டும். மல்லிகையில் மாத்திரமல்ல, வெளியிலும் பழைய இலக்கிய ஆர்வத் துடிப்புடன் கூடிய புதிய எழுத்தாளர்கள் தோன்ற முடியாத நிலை இன்று நிலவுகிறது.

வரதரின் 'தீ வாத்தியார்' ரசிக்கத் தக்கதாக இருக்கிறது. பல தெரியாத பழைய தகவல்கள் இக் கட்டுரை மூலம் தெரிய வருகிறது. தகவலூடாக மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர் பிரச்சினைகளையும் தெரியப்படுத்துவது முக்கியம் பல இளம் எழுத்தாளர்களுக்கு அன்றைய இலக்கியத் தகவல்கள் ஒன்றுமே தெரியாது. வரதர் மூத்த எழுத்தாளர். மறுமலர்ச்சிக் குழுவினரில் செயலூக்கமுள்ள சாதனையாளர். இன்றும் எழுதிக் கொண்டிருக்கும் பழம் பெரும் எழுத்தாளர். எனவே நாம் அவரிடமிருந்து பலவற்றை எதிர்பார்க்க நியாயமுண்டு. அவரைத் தொடர்ந்து எழுத வைத்ததே பெரிய சாதனை.

மல்லிகையில் மாற்றங்கள் தேவை. அட்டை அமைப்பிலிருந்து உள்ளடக்கம் வரை ஒரே மாதிரியாக வருவது சரியல்ல. புதிய புதிய மாற்றங்கள் தேவை. சூழ்நிலையைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொள்ளக் கூடாது.

இத்தனையும் சொல்லும் வேளையில் இந்தக் காலகட்டத்தில் மல்லிகை தொடர்ந்து வெளிவரும் உழைப்பையும் விடாப் பிடியையும் மனமறியப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

சாவகச்சேரி.

அ. தில்லைநாதன்



எந்தக் கேள்வியாக இருந்தாலும் தயங்காமல் கேளுங்கள். பலராலும் விரும்பிப் படிக்கப்படுவது இந்தத் தூண்டில் பகுதியாகும். ஆகவே சுவையான இலக்கியத் தரமான, ஆர்வமான கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. சுவைஞர்கள் என்ன நினைக்கின்றனர், அவர்களுடைய மனக் கருத்து என்னென்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கும் மனந்திறந்து கதைப்பதற்கும் ஏற்ற ஒரு களம் இது. இளந் தலைமுறையினரின் மன விருப்பங்களை, அவர்களது இலக்கிய அபிலாஷைகளை, சிந்தனை ஓட்டங்களை உணர்ந்து அறிந்து கொள்வதற்கும் அவர்களது இதயங்களைச் சமீபிப்பதற்கும் ஒரு தளமே இத்தூண்டில். தூண்டில் கேள்வி — பதிலில் நீங்கள் கலந்து கொள்வதின் மூலம் உங்களுடைய அறிவை விருத்தி செய்வதுடன் நமது தேடல் முயற்சிக்கும் ஆதரவு நல்குகின்றீர்கள்.

# தூண்டில்

● தமிழ் நாடு அரசாங்கம் சமீபத்தில் எழுத்தாளர் சாவி அவர்களைக் கைது செய்ததாமே இதன் பின்னணி என்ன?

மானிப்பாய்; ச. மகாதேவன்

சாவி சஞ்சிகையில் பிரசுரித்த அட்டைப் படம் ஆபாசமாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டியே சாவி கைது செய்யப்பட்டார். அந்தச் சாவி இதழை நான் பார்த்தேன். முதலிரவிற போகும் மகளிடம் புதுக் கணவனுக்கு ஆடை இல்லாமல் பால் கொண்டுபோய்க் கொடுக்கும்படி தாய் சொல்ல, மகள் உடலில் ஆடையே இல்லாமல் பால் கொண்டு போய்க் கொடுக்கிறாள் மூன்றாந் தரத்துப் பகிடி.

மிக மதிக்கப்படத் தக்கவர் எனச் சென்னையில் சொல்லப்படும் சாவி அவர்கள் பெண்மையை மலினமாகக் கொச்சைப் படுத்தும் இந்தப் படத்தை அட்டையில் பிரசுரித்தது கண்டிக்கத் தக்கது. பல பெரிய மனிதர்களின் வக்கிர மன உணர்வுகளின் வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று. அதே சமயம், ஒரு அரசாங்கம் தனது தரத்தை விட்டுக் கீழிறங்கி, பழி வாங்கும் எண்ணத்துடன் ஓர் எழுத்தாளனை — சஞ்சிகை ஆசிரியரை — இப்படி அவமானப்படுத்தியது மிகப் பெரிய ஆபாசம் என நான் கருதுகின்றேன். சாவி அவர்கள் கலைஞரின் வலது கை என்பதற்காக எடுக்கப்பட்ட எதிர் நடவடிக்கையே இது.

● நீங்கள் ரஷ்யாவுக்குப் போயிருந்தீர்களே, அங்கே

காகங்களைக் கண்டீர்களா?

உடுவில், ம. தேவதாசன்

நான் தங்கியிருந்த மாஸ்கோ ஒட்டல் மாடியிலிருந்து காலை வேளையில் ஒரு நாள் வெளியே பார்த்தேன். இரண்டு காகங்கள் பைன் மரத்தில் பக்கம் பக்கமாக இருந்து குலவிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அடுத்து மெடிக்கல் 'செக் அப்' புக்கா ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனார்கள். அங்கே மருத்துவமனைக்கு முன்னால் ஒரு சிறிய பூந்தோட்டம். அங்குள்ள மரத்தில் மூன்று காகங்களைப் பார்த்தேன். காகங்கள் என்றவுடன் நம்மூர் காகங்கள் உங்கள் நினைவுக்கு வரலாம் மாஸ்கோ காகங்கள் காகங்கள் தான், ஆனால் கருமை கலந்திருப்பதை விட, சாம்பல் நிறம் நெஞ்சப் பகுதியில் விரவியிருந்தது. பெரிசாக இருந்தன. சற்று வித்தியாசமாகவும் இருந்தன. பெரும்பாலும் நமது காகங்களை ஒத்திருந்தன.

● 27 ஆண்டுக் கால மல்லிகை வளர்ச்சியின் முக்கி பரிமாணங்களைக் கூற முடியுமா? என் போன்ற இலக்கிய இளசுகளுக்கு இது உதவுமல்லவா?

கொக்குவில், வ. கோகுலன்

இருபத்தேழு ஆண்டுகள் ஒரு சிற்றிலக்கிய ஏடு தொடர்ந்து வெளிவர முடியும் என்பதை முதலில் நிலை நாட்டியுள்ளது மல்லிகையின் தனிச் சிறப்பு சிற்றிலக்கிய ஏடுகள் தமிழகத்திலும் இதைச் சாதிக்கவில்லை 159க்கு மேற்பட்ட இந்த மண் தந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், இசை மேதைகள், புத்தி ஜீவிகள், பொதுசனத் தொண்டர்கள் போன்றோர்களை அட்டையில் போட்டு இந்த நாட்டு மக்களுக்கு மாத்திரமல்ல, தமிழகத்திற்கும் அறிமுகப் படுத்திய பெருந் தொண்டை ஆற்றியது மல்லிகையின் தனிச் சிறப்புகளில் ஒன்று. பேராசிரியர்களில் இருந்து சாதாரண மக்களின் புதல்வர்கள் வரை மல்லிகையில் எழுதி வருவது அடுத்த சிறப்பு. எந்தப் பெரிய படித்த மேதையாக இருந்தாலும் அவர்களது பட்டங்களைத் தவிர்த்து, அவர்களுடைய நாமங்களுடன் மாத்திரம் அன்னாரது படைப்புக்கள் வெளியிடப் படுவது மல்லிகையின் பெருமைகளில் ஒன்று. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். மல்லிகையைத் தொடர்ந்து படித்து வாருங்கள். மிச்ச சிறப்புகள் நாளடைவில் விளங்கும்.

● சஞ்சிகைகளை எவ்வளவு படித்தாலும் மனதில் திருப்தியே இல்லை. மல்லிகையைக் கூட எழுத்தாளர் திக்குவல்லை கமால் அவர்களின் உதவி மூலம் பெற்றேன். படிக்கப் படிக்கத் திருப்தியே இல்லை அது ஏன்?

அடுலுகம, சில்மியா காதர்

முதலில் வாழ்க்கையை நேசிக்கப் பழக வேண்டும். சலிப்பு என்பது வாழ்க்கையின் நோய்க் கூறுகளில் ஒன்று. என்னைப் போன்றவர்கள் வாழும் இந்தப் பிரதேசத்து நெருக்கடிகளை நீங்கள் படித்துத் தெரிந்திருப்பீர்கள். 'மரணங்கள் மலிந்துவிட்ட பூமியிது!' என ஒரு கவிஞன் இதை வர்ணித்தான். ஜீவ மரணப் போராட்டங்களுக்கு மத்தியிலும் வாழ்க்கையை அத்தியந்த வாத்ஸல்யத்துடன் நேசிக்கின்றோம்.

மன விரக்திப் படுபவர்களுக்கு எல்லாமே — வாழ்க்கை உட்பட — அர்த்தமற்றதாகத்

தோன்றும். மன விரக்தியை முறியடித்து வாழப் பழகிக் கொள்வதுதான் சிறந்தது.

சிறந்த புத்தகங்களைத் தேடிப் பிடித்து வாசியுங்கள். வாசிப்பதே ஒரு பரம சுகம். புதுப் புது அநுபவங்கள். அறிவுகள் கிடைப்பது அது ஒன்றினால்தான். எனவே சலிப்பைத் தவிர்த்து புதிய நம்பிக்கையுடன் புத்தகங்களைத் தேடிப் பிடித்து வாசிக்கப் பழகினால் இந்தச் சலிப்பு நம்மை விட்டு குறைந்து விடும்.

● உங்களுடைய மனதைத் தொட்ட சம்பவம் ஒன்றைப் பற்றிச் சொல்ல முடியுமா?

நெல்லியடி, எம். மகாதேவன்

டாக்டர் முருகானந்தன் அவர்களின் ஆதரவுடன் நடைபெறும் 'அறிவோர் கூடல்' நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்காக ஒரு நாள் சைக்கிளில் பருத்தித்துறைக்குப் போய்க் கொண்டிருந்தேன். 'சைக்கிள் உழக்க வேண்டாம்; இந்த வயதில் 'ரிஸ்க்' எடுக்கக் கூடாது. மினி வானில் வாருங்கள்' எனத் தெணியானும், முருகானந்தனும் சொல்லியிருந்தார்கள். நான் அதையொரு சவாலாக ஏற்றுக் கொண்டு விடிகாலையில் சைக்கிளில் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டேன்.

வழியில் வல்லை வெளிப் பாலத்தைத் தாண்டிக் கொண்டிருந்தேன். எதிரே எதிர்க் காற்றை எதிர்த்து ஒருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அவர் என்னைப் பார்த்தாரோ தெரியவில்லை. நான் அவரைக் கவனித்து விட்டேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உப வேந்தர் அ. துரைராஜ் அவர்கள்தான் அவர்!

நான் மனசுக்குள் அப்படியே பிரமித்துப் போய் விட்டேன். ஒரு பல்கலைக் கழகத்தின் உப வேந்தர்; தனது தினசரிக் கடமைகளை நிறைவேற்ற 16—17 மைல் தொலைவுக்கு சைக்கிள் உழக்கி வந்து போகிறார் என்று நினைக்கும் பொழுதே மெய் சிலிர்த்துப்போய் விட்டேன். பின்னர் நகரத்தில் பல இடங்களுக்கும் அவர் சைக்கிளில் சென்று வருவதை அவதானித்து இருக்கின்றேன். தொழில் நுட்பத் துறையில் உலகத்திற்கு ஒரு புதிய 'தியரி' யையே உருவாக்கித் தந்துள்ள அந்தப் பேராசிரியரை அவரது எளிமைக்காக உண்மையாகவே மனசுக்குள் வணங்கினேன். நீங்களும் கண்களைத் திறந்து உற்று உற்று அவதானியுங்கள். இந்த நெருக்கடியான நேரத்திலும், பல அற்புதமான மனிதர்கள் உங்களது கண்களிலும் தட்டுப்படுவார்கள்.

● தமிழ் நாட்டில் அம்மாவின் ஆட்சி எப்படி இருக்கிறது?

தெல்லிப்பழை, ப. ஜெயசீலன்

தமிழ் நாட்டில் ஆட்சிக்குப் பதிலாக சினிமா சூட்டிங் அல்லவா நடைபெறுகின்றது.

● இம்முறை இலக்கியச் சிந்தனைப் பரிசுகள் யார் யாருக்குக் கிடைத்துள்ளது.

நல்லூர், க. சரவணன்

முருகன் என்பவருக்குச் சிறுகதைக்கான பரிசும், தோப்பில் முகம்மது மீரான் என்பவருக்கு 'துறைமுகம்' நாவலுக்கான பரிசும் கிடைத்துள்ளன. தேர்ந்தெ

டுத்தவர் பழம் பெரும் எழுத்தாளர் தி. க. சி. அவர்கள்.

● நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுக்க விரும்புகின்றேன். அதற்கொரு வழி சொல்லுங்கள்.

கோப்பாய், அ. கோபன்

நல்ல நண்பனாக நடக்க உங்களை நீங்கள் பக்குவப்படுத்திக் கொண்டு தேடிப் பாருங்கள். நல்ல நண்பர்கள் அகப்படுவார்கள்,

● தமிழகத்திற்குச் செல்லும் உத்தேசம் இல்லையா? கடந்த தடவை இருபத்தைந்தாவது மலருடன் தமிழகம் சென்றிருந்தீர்கள். இந்தத் தடவை போக யோசிக்கவில்லையா?

கொழும்பு, க. மோகனதாஸ்

சமீபத்தில் கொழும்பு சென்றிருந்தேன். அந்தச் சமயம் ஒரு யோசனை தோன்றியது. சென்னைக்குச் சென்று வந்தால் என்ன என்று. இருந்தும் அந்த யோசனையைத் தற்காலிகமாகத் தவிர்த்துக் கொண்டேன். இன்னொரு தடவை — அடுத்த ஆண்டுத் துலக்கத்தில் தமிழகம் செல்லலாம் என்பது எனது உத்தேசம்.

● ரஷ்யாவின் சீர்குலைவு சோஷலிஸம் தோற்றுப் போய் விட்டதன் அறிகுறியல்லவா?

மாதகல், எம். ரகுநாதன்

மார்க்ஸிஸம் ஒரு விஞ்ஞான தத்துவம். அது ரஷ்யாவை மனசில் வைத்து எழுதப்பட்ட தத்துவமல்ல. மனுக்குலத்தின் எதிர்காலச் சுபீட்சத்தைக் கவனத்தில் கொண்டு ஆக்கப்பட்ட தத்துவம். 70 ஆண்டுக் காலத்தில் அனுபவக் குழறுபடிகள் ஏற்பட்டதன் காரணமாக — சோஷலிஸம் தற்காலிகமாகப் பின்னடைந்து இருக்கலாம். அது மார்ஸிஸத்தின் தோல்வி எனச் சர்வதேசப் பிற்போக்குவாதிகள் கொக்கரிக்கலாம். உலகத் தொழிலாளி வர்க்கம் பல தோல்விகளைக் கண்டு முன்னேறி வந்துள்ளது. பிரெஞ்சுப் புரட்சி தோல்வி கண்ட காலத்தில் இப்படித்தான் சர்வ தேசச் சுரண்டல் கூட்டம் கூப்பாடு போட்டது. அந்தப் புரட்சியின் பரிணாம வளர்ச்சிதான் ரஷ்யப் புரட்சி. ஒன்றை உறுதியாக நம்புங்கள். மனுக்குலம் ஜீவத் துடிப்புடன் இயங்கும் வரை மனுக்குலத்தின் இறுதி விடிவுத் தத்துவமான மார்ஸிஸம் தோல்வி கண்டுவிட முடியாது. இடைக்கிடையே பின்னடைவுகள் நேரலாம். அதையும் சுதாரித்துக் கொண்டு — அந்த அனுபவங்களைச் கிரகித்துக் கொண்டு— சோஷலிஸம் புதிய வேகத்துடன் நடை போட்டு முன்னேறி வரும்.

● இளந் தலைமுறை எழுத்தாளர்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

மானிப்பாய், அ. சக்திஸேஸ்

மனப்பூர்வமான நம்பிக்கை உண்டு.

---

இச் சஞ்சிகை 234 பி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும், வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களினால் 'மல்லிகைப் பந்தல்' அச்சகத்தில் அச்சிடப்பெற்றது. அட்டை: யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்.

# ESTATE SUPPLIERS
# COMMISSION AGENTS

VARIETIES OF
CONSUMER GOODS
OILMAN GOODS
TIN FOODS
GRAINS

THE EARLIEST SUPPLIERS
FOR ALL YOUR

# NEEDS

**Wholesale & Retail**

**Dial: 26587**

*TO*

# E. SITTAMPALAM & SONS.

*223, FIFTH CROSS STREET,*
*COLOMBO-11.*

Mallikai Registered as a News Paper at G. P. O. Sri Lanka

Q. D. 50 NEWS 92.

Dealers in:

Timber Plywood & Kempas



With Best Compliments of:

# STAT LANKA

COLOMBO-12.